பக்கங்கள்: 13
காலைக்கதிர்
Kalaikkathir
விஜயல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 08 வெள்ளிக்கிழமை 23.12.2022 கதிர் 48

**இனி அது ரகசியம் அல்ல!**

சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லித்தானாக வேண்டும். தயவு தாட்சண்யம் பார்க்க முடியாது.

அரசியல்வாதிகள் தோல்விகள், பின்னடைவுகளைக் காணத்தான் வேண்டும். அவை தவிர்க்க முடியாதவை.

☞2

# கோட்டாபய ராஜபக்ஷவிடம் இலஞ்ச, ஊழல் விசாரணை!

## ஆணைக் குழு தீர்மானம்



**சீனி தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதமாக குறைத்து இலங்கை அரசுக்கு கிடைக்க வேண்டிய 1,600 கோடி ரூபாவிற்கும் அதிகமான வரி வருமானத்தை இழக்கச் செய்து பாரிய நட்டத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளது.**

**வரி குறைக்கப்பட்ட போதும் சீனியின் விற்பனை விலை குறைக்கப்படவில்லை. இதனால் சீனியை இறக்குமதி செய்த வர்த்தகர்கள் கொள்ளை இலாபம் அடித்தனர்.**

☞2

## வேரவிலில் வேட்டைப் பொறியில் சிக்குண்ட பெண் சிறுத்தை மீட்பு!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.23

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி வேரவில் பகுதியில் வயலில் வைக்கப்பட்ட பொறியில் சிக்கிய பெண் சிறுத்தை உயிரோடு மீட்கப்பட்டது.

☞2

## போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களில் 5,000 மாணவ இளைஞர்கள் சிறையில்!

### சிறைச்சாலைகள் மேலதிக ஆணையாளர் நாயகம் விசனம்

உயர்தரம் மற்றும் சாதாரண தர பரீட்சைகளில் சித்தியடைந்த 5,000 மாணவ இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையுடனான குற்றச்சாட்டுக்களின் கீழ் சிறைச்சாலைகளில் உள்ளார்கள்.

22 முதல் 30 வயதிற்குட்பட்ட இளம் தலைமுறையினர் தற்போது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை நாட்டின் எதிர்காலத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமையாது என மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜெனரால் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

☞2

## நத்தார் பண்டிகையை முன்னிட்டு எட்டு மேலதிக ரயில் சேவைகள்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பதுளை மற்றும் காங்கேசன்துறைக்கு எட்டு மேலதிக ரயில் சேவைகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் இடம்பெறுகின்றன என இலங்கை ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

☞12

## பொலிஸாருக்கு 125 ஜீப்கள் வழங்கி உதவியது இந்தியா

### இன்னும் 375 ஜீப்கள் கிடைக்கும்

இலங்கைக்கு மற்றுமொரு உதவியாக இந்திய அரசாங்கம், இலங்கைப் பொலிஸுக்கு 125 ஜீப் ரக வாகனங்களை வழங்கி வைத்துள்ளது.

500 ஜீப் ரக வாகனங்கள், பொலிஸுக்கு வழங்கப்படவுள்ள நிலையில், முதல் கட்டமாக 125 ஜீப் ரக வாகனங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

☞12

## கடலில் காணாமல் போனவர் சடலமாக கரை ஒதுங்கினார்

கடந்த செவ்வாயன்று கடற்றொழிலுக்குத் தனியாக படகில் சென்ற பின்னர் காணாமல் போன பலாலிப் பகுதியைச் சேர்ந்த மீனவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

கடற்றொழிலுக்கு சென்ற இராயப்பு றொபேட் கெனடி எனும் 54 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையே காணாமல் போயிருந்தார்.

அப்பகுதி மக்கள் அவரைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். அவர் தொழிலுக்குச்

☞12

## காவலூர் நவரத்தினத்தின் நினைவுப்பகிர்வு தீவகத்தில்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாட்டுப்பற்றாளருமான காவலூர் வி.நவரத்தினம் அவர்களின் நினைவுப்பகிர்வு நேற்று யாழ் தீவகம் புளியங்கூடல் சிவன் பார்வதி மண்டபத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் அனுஷ்டிக்கப்பட்டது.

☞12

## அச்சுவேலி தென்மூலையில் மர்மக் கும்பல் அட்டகாசம்!

யாழ்ப்பாணம் - அச்சுவேலி தென்மூலை கைத்தொழில் பேட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் நேற்றுப் புகுந்த ஆறு பேர் கொண்ட இனம்தெரியாத நபர்கள் வீட்டைத்தாக்கி சேதம் விளைவித்து அட்டகாசம் புரிந்தனர்.

வாள்கள் சகிதம் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் கண்ணாடிகளை அடித்து உடைத்து, சொத்துச் சேதம் ஏற்படுத்தியமையுடன், வீட்டின்

☞12

## இராணுவத் தளபதிக்கு ரணில் ஒரு வருட நீடிப்பு வழங்கினார்



இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவுக்கு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி முதல் ஒரு வருட சேவை நீடிப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆயுதப் படைகளின் கட்டளைத் தளபதி என்ற வகையில் வழங்கியுள்ளார்.

☞12

## சீனாவில் இலங்கைத் தூதரகத்தில் அலுவலர் சகலருக்கும் கொரோனா

சீன தலைநகரில் உள்ள இலங்கை தூதரகத்தின் அனைத்து பணியாளர்களும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தூதரகத்தின் 22 பணியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்

சீனாவிற்கான தூதுவர் பாலித கோஹன இதனை உறுதிசெய்துள்ளார்.

## ஸ்ரீதர் தியட்டர் மீண்டும் ஒளியில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.23

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகமாக இயங்கும் ஸ்ரீதர் தியட்டருக்கு 40 நாள்களின் பின்னர் நேற்று முதல் மீண்டும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2014 டிசம்பர் வரையான காலத்துக் குரிய ஸ்ரீதர் தியட்டரின்

☞12

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தத் தோல்விகளை பல சமயங்களில் மக்கள் மத்தியில் தமக்கு ஆதரவான பச்சாதாபமாக மாற்றுவதும் கூட சாமர்த்தியம்தான். ஆனால், அதில் கொஞ்சமாவது உண்மை இருக்க வேண்டும். பொய் சொல்லி பச்சாதாபம் தேடப் புறப்படக் கூடாது. அப்படிப் புறப்பட்டிருக்கின்றார் யாழ் மேயர் மணிவண்ணன். சிரிப்புக்கு இடமான விடயம் அது.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் யாழ். மாநகரசபையில் அவர் சமர்ப்பித்த அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதும் அவர் தமது முகப்புத்தகத்தில் பின்வருமாறு பதிவிடுகின்றார்:-

“இன்று 2023 வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு சட்டவலு இழந்து ஆட்சி ஆணையாளரின் கீழ் வருகின்றது

“”புதிய மேயர் தெரிவு இடம்பெறுமா என்று தெரியவில்லை....”

- எனக் குறிப்பிட்டிருக்கின்றார் மணிவண்ணன்.

அந்தக் குறிப்பு அவ்வளவும் தவறு. முதல் வரவு - செலவு திட்டம் மட்டுமல்ல, அடுத்த 14 நாள்களுக்குள் அவர் சமர்ப்பிக்கப் போகும் அடுத்த வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் கூட ஆட்சி ஆணையாளரிடம் போகாது. இப்படி வரவு - செலவுத் திட்டங்கள் இரண்டு வெவ்வேறு வருடங்களில் தோற்கடிக்கப்பட்டமையால் இரண்டு மேயர்கள் அல்லது தவிசாளர்கள் பதவியிழந்து மூன்றாவது நபர் தலைவராக அல்லது மேயராக வந்த உதாரணங்கள் தெற்கில் தாராளமாக உண்டு.

அதுவும் வரவு - செலவுத் திட்டம் அந்த வருடத்தில் முதல் தடவை தோற்கடிக்கப்பட்டதும், மாநகரசபை ஆணையாளர்களின் கீழ் வந்து விடுகிறது என்று தமக்கு பச்சாதாபம் தேட முயன்ற மேயர் மணிவண்ணன், குறிப்பிடுவது அவர் தெரிந்தே கூறும் உண்மைக்கு மாறான விடயம், அது அவருக்கே தெரியும், தெரிந்து கொண்டு தான் முகப்புத்தகத்தில் அந்தப் பதிவை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

உண்மையில் இந்த தோல்விக்கு அவர் தமிழ் கூட்டமைப்பை வைது பயனில்லை. அவரைப் பதவிக்கு கொண்டு வந்தவர்கள் அவர்கள் அல்லர். முண்டு கொடுத்து, முதுகு கொடுத்து, அவரைத் தாங்கிப் பிடித்தவர்கள் ஈ.பி.டி.பியினரே. தாம் அதுவரை அவருக்குக் கொடுத்த முட்டை விலக்கிக் கொண்டு - விலகிக் கொண்டு - ஈ.பி.டி.பி. போனமையால் தான் அவரின் பாதீடு தோற்றது. ஆக அவர் வையவேண்டியது ஈ.பி.டி.பியைத்தான். ஆனால் அதனை அவர் செய்யவில்லை. ஏன்? அதற்கும் காரணமுண்டு.

அடுத்த 14 நாட்களுக்குள் அவர் மீண்டும் ஒரு தடவை பாதீட்டைச் சமர்ப்பிக்கலாம். அதுவரை அவர்தான் மேயர். ஆட்சிஆணையாளரிடம்விழுந்துவிடாது. இரண்டாம் தடவையும் பாதீடு தோற்றால் தான் அவர் பதவி துறந்தவர் ஆவார். அப்படித்தான் சட்டம் கூறுகிறது. அதை அடுத்து புதிய மேயர் தேர்வு நடக்கும். அதுதான் சட்ட ஏற்பாடு. அதுவும் கூட அவருக்கு நன்கு தெரியும்.

இரண்டாவது தடவையும் பாதீட்டைச் சமர்ப்பிக்கும் போது, அதற்கிடையில் ஈ.பி.டி.பியை மீண்டும் வளைத்து போட்டு சமாளித்து விட்டால், வென்று விடலாம், பதவியில் நீடிக்கலாம், என்பது அவருக்கு அத்துபடியாகத் தெரியும்.

அதனால்தான் முதல் தடவை முண்டை விலக்கித் தனது பாதீட்டைத் தோற்கடித்த ஈ.பி.டி.பியினரைச் சாடாமல், அவர் அமுக்கி வாசிக்கின்றார். அவர் பதவிக்கு வந்த நாளிலிருந்து அவருடன் முரண்டு பிடித்து நிற்கும் கூட்டமைப்பை மட்டும் திட்டுகிறார் அவர்.

இரண்டாவது தடவையும் 14 நாள்களுக்குள் தான் பாதீட்டைச் சமர்ப்பிக்கலாம், அப்போது வென்றால் பதவியில் நீடிக்கலாம் என்பவை எல்லாம் நன்கு தெரிந்து, புரிந்து கொண்டு, தான் ஈ.பி.டி.பி. விடயத்தில் புத்திசாதுரியமாக மௌனம் காத்து, அத்தரப்புடன் சமாளிப்பதற்கு சமயோசிதமாக இடம் அளித்து காத்திருக்கிறார்.

மறுபுறத்தில் முதல் தடவை பாதீடு தோற்கடிக்கப்பட்ட உடனேயே பதவியும் பறிபோய், மாநகர சபையும் கலைந்து, ஆட்சி ஆணையரிடம் போய்விட்டது என்று மக்கள் காதில் பூச்சுற்றுகின்றார் மேயர்.

இது நியாயமா? முடிவை யாழ் வாக்காளர்களிடமே விட்டுவிடுகிறேன்...!

- மின்னல் -

## கோட்டாபய ராஜபக்ஷ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி நள்ளிரவு முதல் ஒரு கிலோ கிராம் சீனிக்கு விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா விசேட பண்ட வரி 25 சதமாக குறைக்கப்பட்டது.

இந்த வரிக்குறைப்பிற்கு 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட பண்ட வரி சட்டத்தின் விதிவிதானங்கள் பிரகாரம் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இது குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு நிதி அமைச்சின் அதிகாரிகளிடம் விசாரணை நடாத்திய போது, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபயவின் ஆலோசனைக்கமைய வரிக் குறைப்பு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவிடம் விசாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, குறித்த வரிக் குறைப்பு அப்போதைய வர்த்தகத்துறை அமைச்சரான தனக்கே தெரியாமல் செய்யப்பட்டது எனவும், அரச அதிகாரிகள் சிலர் அது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்தனர் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன நாடாளுமன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இந் நிலையில், இந்த வரி மோசடி தொடர்பில் விடயங்களை தெரிந்தோரின் வாக்கு மூலங்களை பதிவு செய்யும் நடவடிக்கையில் ஓர் அங்கமாக கடந்த 19ஆம் திகதி திங்களன்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் ஆஜராக அமைச்சர் பந்துலவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அன்றைய தினம் ஆஜராகாத அவர் பிறிதொரு திகதியை கோரியுள்ளார்.

இதேவேளை, கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி நடந்த அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு (கோபா) கூட்டத்தின் பின்னர் அரசின் உத்தரவிற்கமைய, நிதி, பொருளாதார ஸ்திரம் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன செய்த முறைப்பாட்டை மையப்படுத்தி, பாரிய அளவில் வரி குறைப்பின் ஊடாக கிடைக்கப்பெற்ற பிரதிபலன் நுகர்வோரை சென்றடையாது வேறு தரப்பொன்று கொள்ளை இலாபம் ஈட்டியுள்ளதா என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் நிதிக்குற்ற விசாரணை பிரிவு முதலாம் இலக்க விசாரணை அறை ஊடாகவும் விசாரணை ஒன்றினை ஆரம்பித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## வேரவிலில் வேட்டைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேரவில்ப் பகுதியில் தனியார் ஒருவரின் தோட்டத்தில் வைக்கப்பட்ட பொறியில் சிக்கிய ஒன்றரை வயது பெண் சிறுத்தையையே வன ஜீவராசித் திணைக்களத்தினர மீட்டனர். தோட்டத்திற்கு வரும் பன்றி, முயல் உள்ளிட்ட விலங்குகளுக்காக வைக்கப்பட்ட பொறியில் சிக்கிய நிலையில் சிறுத்தை காணப்பட்டதை அவதானித்த காணி உரிமையாளர் கிராமசேவையாளர் மூலம் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்தார்.

வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர் குழு சிறுத்தையை மீட்டு சிகிச்சைக்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் வடமாகாண மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கு அதனைக் கொண்டு சென்றனர்.

சிறுத்தையின் உடலில் காணப்பட்ட காயத்திற்கு கிளிநொச்சி 55 ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் திணைக்களத்தின் வடமாகாண மருத்துவ சிகிச்சை நிலையத்தில் ஒரு வாரம் அதனை வைத்து சிகிச்சையளித்துப் பராமரிப்பதற்காக ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

## போதைப்பொருள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள் வியாபாரம், பாவனை மற்றும் பொலிஸ் சுற்றிவளைப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

2021ஆம் ஆண்டு சமூக மட்டத்தில் ஹெரோயின் பாவனை குறைவடைந்து ஐஸ் ரக போதைப்பொருள் பாவனை சடுதியாக உயர்வடைந்துள்ளது.

ஹெரோயின் போதைப்பொருளை காட்டிலும் ஐஸ் போதைப்பொருளின் விலை குறைவாக உள்ளமையுடன், எமது நாட்டில் ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக சட்டம் கடந்த காலங்களில் இல்லாத காரணத்தினால் ஐஸ் போதைப்பொருள் பாவனை சடுதியாக அதிகரித்துள்ளது. ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மரண தண்டனை சட்டம் அண்மையில் தான் இயற்றப்பட்டது.

2015ஆம் ஆண்டு பாடசாலை கல்வியை தொடராத 600 பேர் பேதைப் பொருள் பாவனையுடனான குற்றச் செயல்களுடன் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார்கள். இந்த எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டு 190 ஆக குறைவடைந்தது, கடந்த காலங்களை காட்டிலும் தற்போது படித்த இளம் தலைமுறையினர் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடனான குற்றச் செயல்களினால் கைது செய்யப்பட்டு தண்டனைக்குள்ளாகியுள்ளார்கள்.

2015ஆம் ஆண்டு உயர்தரம் மற்றும் சாதாரண தர பரீட்சைகளில் சித்தியடைந்த 2,000 பேர் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடனான குற்றச் செயல்களில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார்கள். இந்த தொகை கடந்த ஆண்டு 5,000 ஆக உயர்வடைந்துள்ளது.

2020ஆம் ஆண்டு 22 பட்டதாரிகள் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடனான குற்றச் செயல்களினால் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார்கள். 2021 ஆம் ஆண்டு 18 பட்டதாரிகள் போதைப்பொருள் பாவனையினால் தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் 30 முதல் 40 வயதிற்கு உட்பட்டவர்கள் தான் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடனான குற்றச் செயல்களினால் கைது செய்யப்பட்டர்கள் ஆனால் தற்போது 22 முதல் 30 வயதிற்கு உட்பட்ட தரப்பினர் தான் போதைப்பொருள் பாவனையினால் கைது செய்யப்படுகிறார்கள்.

சிறைச்சாலைகளில் உள்ள இளம் தலைமுறையினர்களில் அதிகமானோர் போதைப்பொருள் பாவனையுடனான குற்றச்செயல்களில் தொடர்புக்கொண்டுள்ளார்கள். இளம்தலைமுறையினர் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளமை நாட்டுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமையாது என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# என்.எம்.ஆர்.ஏ.அனுமதியில்லாத 28 மருந்துகளை எடுத்துவர சுகாதார அமைச்சர் இந்தியா பயணம்!

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் (என்.எம்.ஆர்.ஏ) பதிவு செய்யப்படாத 28 மருந்துகளை இந்திய நிறுவனம் ஒன்றிடம் இருந்து, உரிய கொள்முதல் நடவடிக்கைகளைப் பின்பற்றாது இறக்குமதி செய்வதற்கு சுகாதார அமைச்சு, அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள 4 கோடியே 60 லட்சம் அமரிக்க டொலரை பயன்படுத்தி இந்த மருந்துகள் தருவிக்கப்படவுள்ளன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள பத்திரம் பிரகாரம், அத்தியாவசிய மருந்துகள் 151, சத்திரசிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட 5 ஆயிரத்து 268 நுகர்வுப் பொருள்கள், 850 இரசாயன பதார்த்தங்கள், எக்ஸ் கதிர்வீச்சுடன் தொடர்புபட்ட பரிசோதனைக்கு அவசியமான 18 வகை பொருள்கள் கையிருப்பில் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனூடாக மருந்து பற்றாக்குறை அடுத்து வரும் வாரங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அமைச்சர் எச்சரித்துள்ளார். அதன்படி இந்தியாவின் நிறுவனம் ஒன்று 3 மாதங்களுக்கு மருந்துகளை விநியோகிக்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சரவைக்கு கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார்.

எனினும் 3 மாதங்களுக்கு மருந்து விநியோகத்துக்கு பரிந்துரைக்கப்பட்ட நிறுவனம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டதல்ல எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன் மேற்படி நிறுவனம் மருந்து விநியோகத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை தொடர்பிலும் அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

வேறு நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்யவும் அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில், குறித்த நிறுவனத்தின் மருந்துகளை இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அங்கீகரித்துள்ளதாக அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



எனினும் இலங்கையில் மருந்துகளின் பயன்பாடு தொடர்பில் அனுமதி வழங்கும் அதிகாரம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கே உள்ளது.

இந் நிலையில் 3 மாதங்களுக்கு மருந்துகளை கொள்வனவு செய்ய பரிந்துரைக்கப்பட்ட விநியோக நிறுவனத் திடமிருந்து மருந்துகள் அத்தியவசிய அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுவதால் அதன் அனுகூலத்தன்மை தொடர்பில் ஆராய வேண்டும் என நிதி அமைச்சு தனது மேற்பார்வை குறிப்பில் பதிவிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், ஒக்ரோபர் அமைச்சர்வை பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீண்டும் டிசெம்பர் 5 ஆம் திகதி மற்றொரு பத்திரத்தை அமைச்சர்வைக்கு சமர்ப்பித்துள்ளார்.

மற்றொரு இந்திய நிறுவனத்திடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்ய இந்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்திடமிருந்து 28 வகை மருந்துகளைக் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் மருந்துகளும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டவை அன்று.

இந் நிலையில் தமது நிறுவனத்தை மேற்பார்வை செய்ய வருமாறு சுகாதார அமைச்சர் கெஹலியவுக்கு குறித்த இந்திய நிறுவனம் கடந்த 17 ஆம் திகதி அழைப்பு விடுத்துள்ளது.

அதன்படி புதன்கிழமை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோர் மருந்தாளர்கள் எவரும் இன்றி இந்தியா நோக்கி சென்றுள்ளார்.

இந்த பயணத்துக்கான அனைத்து செலவுகளையும் அந்த இந்திய நிறுவனம் பொறுப்பேற்றுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

## விபத்துக்கள், வன்முறைகளுக்கு இளைஞர்கள் உட்படக் கூடாது!

### கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை



அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட் டுப்பாடு நிலவும் போது விபத்துக்களில் சிக்காமலும் வன்முறைகளில் ஈடுபடாம லும் இளைஞர்கள் இருக்க வேண்டுமென சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

கனேடியத்தமிழர்களது நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை தெல்லிப் பழை புற்றுநோய் வைத்திய சாலைக்கு நன்கொடையாக வழங்கிய பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. இந்நிலையில் இளைஞர்கள் விபத்துக்களில் சிக்கல், வாள்வெட்டு வன்முறை சம்பவங்களிலும் ஈடுபடல் போன்ற வற்றால் தேவையற்ற நெருக்கடி ஏற்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் பாடசாலைகளில் காகித தட்டுப்பாடு ஏற்படும். இவ்வாறான நேரத்தில் புலம்பெயர் தேசத்தவர்கள் நீங்கள் படித்த பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கு முன் வரவேண்டும். குளிரூட்டி, நவீன சாதனங்கள் வழங்குவது என்பது ஒரு பக்கம் இருக்க அடிப்படை விடயமான கல்வியில் நாம் கரிசனை கொள்ள வேண்டும்.

இலவச பாட புத்தகங்களை அச்சிடுவதற்காக அரசாங்கம் திண்டாடும் போது அடிப்படை கல்விக்கான புத்தகங்கள் கொப்பிகளை வாங்குவதற்கு புலம்பெயர் தேசத்தவர்கள் உதவ வேண்டும். – என்றார்.

## கொழும்பு துறைமுக நகருக்கு தனியான நீதிமன்றம் அமைப்பு!

கொழும்பு துறைமுக நகர அதிகார வரம்புக்குள் புதிதாக வர்த்தக மேல் நீதிமன்றத்தை அமைப்பது தொடர்பாக சட்டத்துறை உயர் அதிகாரிகளுடன் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், எதிர்காலத்தில் துறைமுக நகரப் பகுதியில் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருள்கள் பாவனைக்காக யாசகத்தில் சிறுவர்களை ஈடுபடுத்தல்!

சிறுவர்களை பயன்படுத்தி யாசகத்தில் ஈடுபடும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன எனக் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதய குமார அமரசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனைக்காக, சிலர் சிறுவர்களைப் பயன்படுத்தி யாசகத்தில் ஈடுபடுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பலமுறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



## எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் சிறுபான்மையினருக்கு அநீதியிழைக்கக் கூடாது!

### ரிஷாத் வலியுறுத்து



உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவை, மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடளாவிய ரீதியில், மக்கள் காங்கிரஸ் கட்சியால் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பின்னர், பொதுமக்களாலும் பொது அமைப்புக்களாலும் எல்லை நிர்ணய திருத்தம் சம்பந்தமாக, தமது கட்சிக்கு வழங்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தை, ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் ரிஷாத் கையளித்தார்.

அத்துடன், கடந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, தேர்தல் முறையிலே குளறுபடிகள் இருந்ததால், அந்தத் தேர்தல் முறை பாரிய தோல்வியை ஏற்படுத்தியது எனவும் ஆணைக் குழுவின் தலைவரிடம் சுட்டிக் காட்டினார்.

இனிவரும் காலங்களிலும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்கும் பட்சத்தில், சமூக ரீதியான மற்றும் இன ரீதியான பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்த அவர், இதன் காரணமாக பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் குறிப்பிட்டார்.

எனவே, பழைய விகிதாசார முறைப்படி தேர்தலை நடத்த வேண்டும் எனவும், அவ்வாறு நடத்துகின்ற பட்சத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் எதிர்பார்க்கின்ற அளவிலான குறைப்பை செய்ய முடியும் எனவும் எடுத்துரைத்தார்.

பழைய விகிதாசார தேர்தல் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமது கட்சியின் இறுதி நிலைப்பாடு எனவும், அதற்குரிய சிபாரிசை எல்லை நிர்ணய ஆணைக் குழு அரசாங்கத்திடம் முன்வைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அனுமதிக்க வேண்டாம் எனவும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பில், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஹமீட் மற்றும் மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் அப்துல்லாஹ் மஹ்ரூப் ஆகியோரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விக்கியிடம் ஒப்படையுங்கள்!

**முன்ன அனுபவம் இல்லாத அரசியல்வாதிகள் சின்னத்தனமாக நடந்து கொள்வது தவிர்க்க முடியாதது தான். நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் வயதில் மூத்தவர். ஓய்வு பெற்ற நீதியரசர். ஆனால் அரசியலில் கற்றுக்குட்டிதான். இன்னும் பத்து ஆண்டு அனுபவம் கூடப் பெறாதவர்தான். அதனால் தான் தம்மை அறியாமலே பல அரசியல் குழப்பங்களுக்குக் காரணமாகி விடுகிறார்.**

**75 ஆண்டு காலமாக தீர்க்க முடியாத தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை 75 நாள்களில் தீர்ப்போம் என்று கூறிக்கொண்டு புறப்பட்டு விட்டார் ஜனாதிபதி ரணில். 75 நாள்கள் என்ன, ஏழரை நாள்களில் தீர்க்கலாம் என தமிழர் தரப்பின் சுமந்திரன் பதிலடி கொடுத்துக் கொண்டு பேச்சுக்கு முஸ்தீபு செய்கிறார்.**

**அது எப்படி ஏழரை நாளில் சாத்தியமாகும்? பாடசாலைகளில் படிக்கும் காலத்தில் படிக்கும் வேலைகள் எல்லாம் பள்ளிக்கூடத்தில் மட்டும் யாரும் முடித்து விடுவதில்லை. வீட்டு வேலை ('ஹோம் வேர்க்') செய்ய வேண்டி இருக்கும்.**

**ஏழரை தசாப்த காலச் சிக்கலை ஏழரை நாளில் தீர்ப்பதாயின், அதற்கும் 'ஹோம் வேர்க்' கடுமையாகச் செய்ய வேண்டி இருக்கும்.**

**இனப் பிரச்சினைத் தீர்வு ஒரு புறம் இருக்கட்டும். உதாரணத்திற்கு ஓர் உடனடிப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம். அரசியல் கைதிகள் விவகாரம். ஐம்பது அரசியல் கைதிகள் இருந்தால் கட்சித் தலைவர்கள் எல்லோரும் கூடி இருந்து, அந்த ஐம்பது கைதிகளின் நிலைமை குறித்தும் ஒவ்வொன்று ஒவ்வொன்றாக நாள் முழுவதும் இருந்து ஆராய்ந்து, பேசித் தீர்மானித்தால் இன்னும் ஏழரை ஆண்டுகள் அமர்வுகள் நடத்தினாலும் பிரச்சினை தீராது. சம்பந்தப்பட்ட தரப்புகளின் முக்கியஸ்தர்கள் – நீதி அமைச்சர், முன்னாள் நீதி அமைச்சரான இப்போதைய வெளிவிவகாரம் அமைச்சர், சட்டமா அதிபர், சுமந்திரன் போன்றோர் 'ஹோம் வேர்க்' செய்து, இறுதி விவரங்களுடன் உரிய உத்தியோகபூர்வக் கூட்டத்திற்கு போனால் 10 ,15 நிமிடத்தில் அந்த விவகாரத்துக்கு ஒரு முடிவை எட்டலாம். இத்தகைய பேச்சுக்களில், அவற்றையொட்டி ஹோம் வேர்க்கள், பேச்சுக்கான பேச்சுக்கள், நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு என்று கூட்டத்துக்கு முந்திய உத்தியோகப்பற்றற்ற கூட்டங்கள் பல தவிர்க்க முடியாதவை.**

**இப்போதும் கூட 10,11,12,13 ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வமாக மரதன் அமர்வுகள் நடத்தப்பட உள்ளன. அதற்கு முன்னர் ஐந்தாம் திகதி கூட்டத்துக்கான ஏற்பாட்டுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. அது உத்தியோகபூர்வ கூட்டமல்ல.**

**புலிகள் கால சமாதான பேச்சுக்களின் போது கூட, கூட்டத்திற்கான கூட்டங்கள் பலவற்றை அனுசரணை தரப்பு நடத்தியமை கண்கூடு. இப்போது அனுசரணை தரப்பு என்று ஒன்று இல்லாதமையால் சம்பந்தப்பட்ட தரப்புகளே முன் ஆயத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி உள்ளன.**

**விக்னேஸ்வரன், பிறருடன் அணி சேர்ந்து பண்ணும் காதாகாலாட்சேபத்தைப் பார்க்கும் போது, இந்தக் கூட்டத்திற்கான கூட்ட ஏற்பாடுகள், ஒழுங்குகள், தயாரிப்புகளைச் செய்யும் பணியை சுமந்திரனிடமிருந்து பிடுங்கி, அவரிடமும் (விக்கியிடமும்), அவர் அணிசேர்க்கும் செல்வத்திடமும் கொடுத்தால் இன்னும் வேகமாக தீர்வு வருமோ, என்னவோ? முதலமைச்சர் பதவியை தம்பாட்டில் அவரிடம் ஒப்படைத்து 'பட்டுத் தெளிந்த' சம்பந்தன் இதையும் ஒரு தடவை அவரிடம் ஒப்படைத்துப் பார்த்தால் திறன் விளங்கும். ஆனால், இனம் விளங்குமோ தெரியவில்லை...!**

## தீயால் வீடுகளை இழந்தவர்கள் நுவரெலியாவில் நிர்க்கதி நிலை!

### நடவடிக்கை எடுக்கப்படுமா?



நுவரெலியா – இராகலை 2ஆம் பிரிவு தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தோட்ட நிர்வாகத்தால் அமைக்கப் பட்ட தற்காலிக வீடுகளில் அடிப்படை வசதிகள் இன்மையால் பல்வேறு பாதிப்புகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

மேற்படி தோட்டத்தில் உள்ள லயக் குடியிருப்பில் 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ பரவல் காரணமாக 14 வீடுகளைக் கொண்ட குறித்த லயக் குடியிருப்பு முற்றாக எரிந்து தீக்கிரையானது.இதனால் 14 குடும்பங்களை சேர்ந்த 60 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக் கப்பட்டு நிர்க்கதியாகினர்.

மேலும், இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிக கூடாரங்களில் எவ்வித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில்,தொடர்ந்தும் ஒன்றரை வருடங்களாக கூடாரங்களில் பல்வேறு அசௌகரிங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான புதிய வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல், 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டப்பட்டு பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதிலும் தற்போது அதன் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இவர்கள் வாழும் தற்காலிக கூடாரங்களில் குடிநீர், மின்சாரம், மலசலக்கூடம் ஆகியன முறையாகஇல்லாதகாரணத்தால்தினந்தோறும் இவர்கள் பல்வேறுப்பட்ட அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள வீடுகளும் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், வீடுகள் கட்டப்பட்டுள்ள பகுதிகள் காடாக காட்சியளிக்கின்றது. அத்தோடு, கட்டுப்பட்டுள்ள வீடுகளில் உள்ள சுவர்கள் வெடிப்புற்று காணப்படுவதையும் காணக் கூடியதாக இருந்தது.

இந்த நிலையில் தமக்கான நிரந்தர வீடுகளும் இல்லாமல், தற்காலிக வசிப்பிடத்தில் அடிப்படை வசதிகளும் இல்லாமலும் சொல்லொனா துயரங்களுக்கு மத்தியில் வாழும் எமக்கு விடிவையும், உடனடியாக தமது வீடுகளை முழுமைப்படுத்தி தருவதற்கு அரசியல்வாதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## இறைச்சிகளை கொண்டு செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கம்!

வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து விலங்குகள் மற்றும் இறைச்சிகளைக் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது.

குளிர் காலநிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கில் கால்நடைகள் இறந்தமை உறுதிசெய்யப்பட்ட நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னதாக வடக்கு மாகாணம் தவிர மற்ற அனைத்து பகுதிகளிலிருந்தும் இறைச்சி போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

கடந்த மாதம் ஏற்பட்ட குளிருடனான காலநிலை காரணமாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் சுமார் 1600 கால்நடைகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின் கட்டணத்தை அதிகரிப்பது மனித உரிமை மீறும் செயலாம்!

### மனித உரிமை ஆணைக்குழு அறிக்கை

ஜனவரியில் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாக கருதப்படும் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் முறைப்பாடுகள் இல்லாமலேயே இந்த விவகாரத்தில் தலையிடத் தயார் என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போதை பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்கனவே பெரும் சுமைகளை சுமக்கும் மக்களை மேலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் உரிமை அரசாங்கத்துக்கோ அதன் பங்குதாரர்களுக்கோ கிடையாது என மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் அமைச்சோ அல்லது இலங்கை மின்சார சபையோ மின்சார கட்டணங்களை அதிகரிக்கத் தீர்மானித்தால் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் என அதன் இயக்குநர் நிகால் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

## தனது வளர்ப்பு நாய்க்கு வைத்தியம்செய்ய முன்வராதமையால் கொலை அச்சுறுத்தல்!

### வைத்தியருக்கு விடுத்த முன்னாள் அமைச்சர்

நோயால் பாதிக்கப்பட்ட தனது வளர்ப்பு நாய்க்கு வைத்தியம் செய்ய முன்வராதமை காரணமாக முன்னாள் அமைச்சர் ஒருவர் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தார் என ஜா –எல பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடை வைத்தியர் ஒருவர் ஜா –எல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி முன்னாள் அமைச்சர் கொழும்பில் உள்ள வீடொன்றில் வசிக்கிறார் எனவும், தனது வீட்டில் உள்ள வளர்ப்பு நாய்க்கு உடல் நலக்குறைவாக உள்ளதால் சிகிச்சைக்கு வருமாறு கூறினார் எனவும், ஆனால் தான் வரமாட்டேன் என கூறியதால் தனக்குக் கொலை மிரட்டல் விடுத்தார் எனவும் வைத்தியர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நாட்டு மக்கள் பட்டினியில் அதனால் நத்தார் இல்லை!

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அறிவிப்பு

நாட்டு மக்கள் பட்டினி கிடக்கும்போது இந்த வருடம் நத்தார் பண்டிகையை கொண்டாட முடியாது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 6.1 மில்லியன் மக்கள் ஒருவேளை உணவு உண்ணாமல் பட்டினி கிடக்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இதன் காரணமாகவே இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை நாட்டில் இவ்வளவு அழிவுகளுடன் கொண்டாட முடியாதுள்ளது.

ஆட்சியாளர்களின் மோசமான செயல்களால் நாட்டுக்கு இப்படி நேர்ந்துள்ளது. பிச்சைக்காரர்கள்போல் உணவும் பானமும் கேட்டு உலகம் முழுவதும் செல்கிறார்கள்.

இவ்வளவு அழகான, பசுமையான எமது நாடு உணவு மற்றும் பானங்களுக்காக பிச்சை எடுப்பதற்காக நாம் வெட்கப்பட வேண்டும். மோசமான ஆட்சியாளர்களின் செயலால் தான் நாட்டுக்கு இந்த நிலையை நேர்ந்துள்ளது.



## கிறிஸ்மஸ் தின ஆராதனைகளுக்காக தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு!

கிறிஸ்மஸ் தின ஆராதனைகள் மற்றும் அது தொடர்பான விசேட வைபவங்கள் இடம்பெறும் அனைத்து தேவாலயங்களுக்கும் முழுமையான பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில், தேவாலயங்களுக்குப் பொறுப்பான பாதிரிமார்கள் மற்றும் போதகர்களைச் சந்தித்து, கலந்துரையாடி, அதற்கான அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிறிஸ்மஸ் பண்டிகையின்போது தேவாலயங்களுக்குள் நுழையும் சந்தேகத்துக்கிடமான நபர்கள் மற்றும் அந்நியர்களை அடையாளம் காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தவறவிடப்பட்ட தங்க நகைகளை பொலிஸில் ஒப்படைத்துள்ள நபர்!

மொனராகலை கல்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த கே.எம். லக்மால் தயாரத்ன என்பவர் மொனராகலை சந்தைப் பகுதிக்கு அருகில் ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான நான்கரை பவுண் கொண்ட இரண்டு தங்கச் சங்கிலிகள், மோதிரம் மற்றும் பதக்கங்கள் அடங்கிய தங்கப் பொதியொன்றை கண்டெடுத்து, பொலிஸ் தலைமையகத்தில் ஒப்படைத்துள்ளார்.

மொனராகலை நகரில் அமைந்துள்ள நிதி நிறுவனமொன்றின் கணக்கியல் பிரிவில் பணி புரியும் இவர், புதன்கிழமை பிற்பகல் நகரிலுள்ள நிறுவனமொன்றுக்கு தனிப்பட்ட தேவைக்காக சென்றுகொண்டிருந்த போது, கடையொன்றுக்கு அருகில் இந்த தங்கப் பொதி கிடந்துள்ளதைக் கண்டுள்ளார்.

இதனையடுத்து அவர் மொனராகலைபொலிஸ்தலைமையகத்துக்குச் சென்று, தலைமையகபிரதானபொலிஸ் அதிகாரியை சந்தித்து, தங்க ஆபரணங்களை ஒப்படைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதன்போது கே.எம்.லக்மால் தயாரத்ன ஆற்றிய நற்செயல் சமூகத்துக்கே முன்னுதாரணமாக அமைவதாக பொலிஸார் பாராட்டியுள்ளனர்.




## கிறிஸ்மஸ் பண்டிகையில் மதுபானசாலைகள் பூட்டு!

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்து மதுபான கடைகளும் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.


எவ்வாறாயினும் 25 ஆம் திகதி அனைத்து ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் விற்க அனுமதிக்கப்படும் என்றும் மதுவரித் திணைக்களம் கூறியுள்ளது.

## மின்னல் தாக்கி பெண் உயிரிழப்பு!

இரத்தினபுரி – நிவித்திகல, எலபாத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் 34 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில், புதன்கிழமை மாலை வேளையில் தமது வீட்டில் அமர்ந்து கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் மேற்படி பெண் உயிரிழந்துள்ளார் எனத் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பலியான பெண்ணின் சடலம் இரத்தினபுரி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# கிளிநொச்சியில் ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=

Chiken Fried Rice with Vegetable - 1100/=

Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# தந்திரமா, ராஜதந்திரமா?



என்.சத்தியமூர்த்தி

## அக்க ரை/றை அலசல்



தான் கூறியமை போல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர் தரப்புகளுடன் இரண்டு சுற்று பேச்சுவார்த்தை நடத்தி விட்டார். இதில், முதல் சுற்றில், நாடாளுமன்றில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடப்பட்டிருந்தது. வழக்கம் போல், ஜே.வி.பி., அழைப்பை புறக்கணித்தது. கொசுறாக, ஆளும் தரப்பில், மொட்டுக் கட்சி கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற விமல் வீரவன்ஸவும், உதய கம்மன்பில்லவும் கூட பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவில்லை.

அரச தரப்பில் ஜனாதிபதி, பிரதமர் தினேஷ் குணவர்தனே மற்றும் இரண்டு மூன்று பேர் என்று இந்த வார பேச்சுவார்த்தையில் பங்கு பெற்றனர். கடந்த முறை போல, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்குபெறவில்லை. காரணம், இது முந்தையதை போல் அனைத்து கட்சி கூட்டம் அல்ல.

என்றாலும், தமிழர் தரப்பில், இரண்டே இரண்டுபேர்மட்டுமேகலந்துகொண்டமை, நெருடலாக உள்ளது. பல காலத்திற்கும் பேசு பொருள் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவராக சம்பந்தன், அதன் பேச்சாளர் என்ற ஹோதாவில் சுமந்திரன். மற்ற எந்த தலைவருக்கும் அரசு நேரடியாக அழைப்பு அனுப்பவில்லை. அனுப்பப்பட்ட அழைப்பும், அரசின் பெயரில், ஒரு அமைச்சரோ, ஜனாதிபதி அலுவலகத்தை சார்ந்த அதிகாரியோ அனுப்பவில்லை.

மாறாக, அரசின் சார்ப்பாக சுமந்திரன், விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்தனை தொலைபேசியில் அழைத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதில், அரசு செயல்பாட்டில் தவறு இருக்கிறது. அதற்கும் அப்பால் சென்றால், இரண்டு பேர், அதுவும் இருவருமே ஒத்த கருத்து உள்ளவர்கள், மட்மே தமிழ் தலைவர்கள் என்று பங்கு பெற்றால், அது எவ்வாறு அனைத்து தமிழ் மக்களையும் பிரதிநிதிபடுத்தியதாக ஏற்றுக்கொள்ளப்படும்?

இது, ரணிலின் குள்ளநரி தந்திரத்திற்கு மீண்டும் ஒரு எடுத்துக்காட்டா? அல்லது, அவருக்கு இருப்பதாக கருதப்படும் ராஜதந்திரத்தின் வெளிப்பாடா? எது எப்படியோ, தமிழர் தலைமைகள், தங்களில் சிலருக்கு மட்டுமே உள்நாட்டு அரசும், சர்வதேசமும் அதிக முக்கியத்துவம் அளிப்பது குறித்து ஆதங்கப்பட்டால், அதில் பின்பற்றப்படும் முறைபாடுகள் முறைகேடானதே. அதே சமயம், அந்த பேச்சுவார்த்தைகளின் உள்ளடக்கத்தை பார்த்தால், சுமந்திரன் போன்றோருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் ஏற்புடையதே.

என்றாலும், தமிழ் மக்களை பிரதிநிதிப்படுத்துவோர் என்று நினைத்து, அரசும் சர்வதேசமும் உரையாடும் தலைவர்கள், அந்த மக்களின் ஆதரவை பெற்றவர்களா, அல்லது, இருக்கிற தலைவர்களிலாவது வாக்கு விவரம் அடிப்படையிலாவது முன்னிலை வகித்தவர்களா, என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். அந்த வகையில், அந்த வகையில் மட்டுமே, கடந்த 2013 வட மாகாண சபை தேர்தலில் முன்னிலை வகித்த கூட்டமைப்பு முதலமைச்சர் வேட்பாளர், அதீத வாக்குகள் பெற்று, மக்கள் பிரதிநிதி என்ற அந்தஸ்தை பெற்றார். என்றாலும், அவரால் அந்த வாய்ப்பை, அந்த மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் செயல்பட முடியாமை, வருத்தத்திற்குரிய விடயம்.

### விக்கியின் விஞ்ஞாபனம்

இந்த வாரத்தில் ஜனாதிபதி கூட்டிய பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாமைக்கு விக்னேஸ்வரன் கூறியுள்ள காரணம், இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அவர் கூறியது போல், சுமந்திரன் மூலம் மட்டுமே ஜனாதிபதி, தமிழ் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பியிருந்தால், அது தவறான முன் னுதாரணம். அதை, ரணில் முன்யோசனை இல்லாமல் செய்தார் என்றுநினைத்து ஏற்றுக்கொள்ள முடியாது.

மாறாக, இதுபோன்றசிறியவிதைகளை விதைத்து, வினைகளை அறுவடை செய்வது, ரணில் போன்ற தென்னிலங்கை தலைவர்களுக்கு பழகி போன விடயம். தமிழர் தலைவர்கள் தான் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். குறிப்பாக, சுமந்திரன் போன்றோர், ரணில் ஆடும் ஆட்டத்தில் சேர்ந்து ஆட கூடாது. இன்னும் சொல்லப்போனால், இதன் காரணமாகவே, அவர்களது ஆட்டமே, ஆட்டம் காணும் சாத்தியம் உள்ளது.

இதற்கு அப்பால் சென்று, கொள்கை ரீதியாக சுமந்திரன் குறித்து விக்னேஸ்வரன் முன்வைத்துள்ள எதிர்ப்புகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் ஜனநாயகத்தில், தனியொருவருக்கும் தங்களது கொள்கை என்று பழைசாற்றிக் கொள்ள உரிமை உள்ளது. அது மக்கள் மன்றில் விற்றுபோகிறதா, என்பதே அவர்களது தலைமைத்துவத்தை நிரூபிக்கும். இந்த அளவு கோலில், விக்னேஸ்வரன் மற்றும் சுமந்திரன் போன்றோரே சாதிப்பதற்கு எவ்வளவோ இருக்கிறது.

அதற்கிடையின் நான் பெரியவனா, நீ பெரியவனா? என்பது போன்ற கேள்விகளை எல்லாம் மூடை கட்டி வைத்து, தமிழ் தலைவர்கள் ஒன்றாக நின்றால் மட்டுமே, தங்கள் மக்களுக்கு ஏதாவது நன்மை பயக்க முடியும். இல்லாமல் தொடர்ந்து, தென்னிலங்கை தலைமைகளையும், தங்களில் ஒருவரை ஒருவரையும், மனத்தால், வாக்கால், செயலால் தாக்குவது எல்லாமே, தமிழனின் தன்மான கொள்கைக்கு எதிரானது தான். இழுக்கும் தான்.

என்றாலும், இந்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றமாகவே கடந்த புதன் கிழமை நடந்த இரண்டாவது சுற்றை காணவேண்டும். இதில், சிங்கள, முஸ்லிம் மற்றும் மலையக தமிழர் கட்சிகளுக்கு பங்குபெறுவதற்கு அழைக்கப்படவில்லை. அதிலிருந்தே, இந்த சுற்று பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வை இடைநிறுத்திவிட்டு, தமிழர்களின் அரசு சார்ந்த கோரிக்கைகளுக்கு விடைகாண, மீண்டும் ஒரு முறை முயற்சி எடுக்கப்படுகிறது என்பது ருசுவாகியுள்ளது. இதில், அரசியல் கைதிகள் விடுதலை, காணி அபகரிப்பு மற்றும் சுவீகரிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்கள் இடம் பெற்றன.

சிறையில் இருக்கும் 14 அரசியல் கைதிகளில் ஐந்து பேர் உடனடியாக விடுவிக்கப்படுவர் என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. அது போன்றே காணி விடயத்திலும், அரசின் பாதுகாப்பு கவுன்ஸில் அடுத்த வாரத்தில் சாதகமான முடிவை எட்ட வழி செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

### காணி விவகாரம்

இனப்போர் காலகட்டத்திலும் அதற்கு முன்னரும், தமிழர் பகுதிகளை தவிர்த்த ஏனைய மாகாணங்களில், விரிந்து பரந்து கிடந்த அரச காணிகள், அந்த பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால், போர் காரணமாகவே, தமிழர் பகுதகளில் உள்ள அரச காணிகள் அவ்வாறு பகிர்ந்தளிக்கப்படவில்லை.

இதன் காரணமாகவும், போர்காலத்தில், தமிழர் பகுதிகளில் டேரா போட்ட இராணுவ முகாம்களை, நாட்டின் பிற பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யமுடியவில்லை என்று அரசு தரப்பினரில் சிலர் முன்னர் கூறியுள்ளனர். அது உண்மை என்றால், அது குறித்து, அரச தரப்பு இனியாவது, தமிழர் தலைமைகளிடம் உண்மை நிலைமையை எடுத்துரைக்க வேண்டும்.

என்றாலும், தமிழர் பகுதிகளுக்குள்ளேயே இவ்வாறு அடையாளம் காணப்படும் அரச காணிகளில், இராணுவ முகாம்களை மாற்றி அமைப்பதில் என்ன சிக்கல், என்பதை யாரும் இது வரை தமிழர்களிடம் கூறவில்லை. காரணம், அவ்வாறு காரணங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

அதே சமயம், எங்கே, தமிழ் பகுதிகளில் மீண்டும் தீவிரவாதம் தோன்றி விடுமோ என்று அரசும் இராணுவமும் அச்சப்பட காரணம் இல்லை. மாறாக, குறிப்பாக அறகலயா போராட்டத்திற்கு பின்னர், அவ்வாறு தீவிரவாதம் மீண்டும தலை தூக்ககினால், அது தென்னிலங்கையிலேயே நிலைகொள்ளும் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எது எவ்வாறானாலும், தமிழர் காணிகளை விடுத்து, விடுவித்து, அரச காணிகளில், கடற்படை உள்ளிட்ட இராணுவ முகாம்களை மாற்றி அமைப்பதற்கு எந்த வித நடைமுறை சிக்கல்களும் இருக்க முடியாது. அதை விட முக்கியமாக, இவ்வாறு, இராணுவ முகாம்களை முடிந்த அளவிற்கு தமிழர் பகுதிகளில் இருந்து மாற்றி அமைத்தால் மட்டுமே, தமிழ் மக்களுக்கு அரசு மற்றும் சிங்கள தரப்பினர் மீது நம்பிக்கை தோன்ற வாய்ப்புள்ளது.

ஆங்கிலத்தில் இதனை, 'காண்பிடன்ஸ் பில்டிங் மெர்ஸ்' அல்லது சிபிஎம் என்று கூறுவார்கள். போருக்கு பின்னர் அமைதி கோரும் இரு நாடுகள், அல்லது உள்நாட்டு போர்களை சந்தித்த தரப்பினர் சகஜ உறவுகளை புதுப்பித்து கொள்வதற்கு இத்தகைய முயற்சிகள் கைகொடுக்கும்.

இராணுவத்தில் வசம் உளள தமிழர் காணிகள் போலவே, அண்மை காலத்தில், குறிப்பாக, பதவியிழந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் ஆட்சி காலத்தில், தமிழர் பகுதிகளில் உள்ள அரச நிலங்கள் பௌத்த மத வளர்ச்சிக்காக கொடுக்கப்பட்டதையும் தமிழர் தரப்பு எதிர்க்காமல் இருக்க முடியாது. இது குறித்து ஏதாவது முடிவு காணப்பட்டாலும், இப்போது பௌத்த கோவில்களுக்கும், பிற நிறுவனங்களுக்கும் கொடுக்கப்பட்ட காணியை மீண்டும் அரசு திரும்ப பெற்றுக் கொள்ளாது என்ற நிலையே தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

### இழுத்த இழுப்பு

இவற்றிற்கு அப்பால் சென்று, அரசியல் தீர்வு என்ற வகையில், பதிமூன்றாவது திருத்தத்தை முழுவதுமாக அமல்படுத்த தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அப்போது பேசிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பதிமூன்றிற்கு அப்பாலும் செல்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்த தாங்கள் தயாராக இருப்பதாக நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார்.

இந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி கூடி பேசி, அடுத்த 10 முதல் 13 ஆம் திகதி வரை, அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, முடிக்கப்படும் என்று முடிவு செய்துள்ளதாக அறிய முடிகிறது. இதன் அடிப்படை, அரசியல் யாப்பில் இப்போது இடம் பெற்றுள்ள 13 ஆவது திருத்தத்தை உள சுத்தியுடன் செயல்படுத்துவது ஆகும்.

அது குறித்து, தமிழர் தரப்பினர் கோருவதெல்லாம், சமஷ்டி சார்ந்த அரசியல் தீர்வு மட்டுமே. அவ்வாறு சமஷ்டி தீர்வு கிடைக்குமா என்பது ஒரு புறமிருக்க, அது குறித்து பேச்சுவார்த்தைகள் அனைத்து தரப்பினருடனும் நடத்துவதற்கு கூட தற்போது நேரமில்லை.

காரணம், நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர், அரசியல் தீர்வு குறித்து முக்கிய அறிவிப்புகளை தான் செய்ய வேண்டும் என்பதில் ரணில் ஆர்வமாக இருக்கிறார் என்பது வெளிப்படை. அதன் மூலம் தனது இழந்த அரசியல் செல்வாக்கை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கூட மீண்டெடுக்க முடியும் என்பது அவரது கணக்காக இருக்கலாம். ஆனால், அதன் மூலம் நன்மை விளைவதென்றால், அதனையும் தமிழர்கள் வரவேற்க வேண்டும்.

### நடைமுறை சாத்தியம்

அதே சமயம், நடைமுறை சாத்தியமில்லாத விடயங்களில், தமிழர் தரப்பு இழுத்த இழுப்பிற்கெல்லாம் ரணில் ஆடுவார் என்று யாரும் கனவு காண வேண்டாம். இது அனுபவம் அவருக்கு கற்றுக்கொடுத்த பாடம்.

அதாவது, முன்பு எப்போதும் இல்லாமல், இப்போதாவது, தமிழர் தரப்பு நடைமுறை சாத்தியமான விடயங்கள் குறித்து மட்டுமே சிந்திக்க வேண்டும், பேச வேண்டும். செயல்படுத்த வேண்டும். அதை விடுத்து, இல்லாத ஊருக்கு, அதுவும் அமாவாசை இருட்டில், வழி தேடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அந்த விதத்தில், அரசு, பதிமூன்றை நடைமுறைப்படுத்துவதாக உறுதி அளித்தால், அதனை இடைக்கால தீர்வு திட்டமாக தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதுவே, அத்தனை எளிதான விடயமல்ல. காரணம், பதிமூன்று அளித்து, மறந்துபட்ட வரதராஜ பெருமாள் தலைமையிலான ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாணத்திற்கு, முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்த சில – பல அதிகாரங்கள் கூட தற்போது மாகணங்களுக்கு இல்லை.


அது போன்றே, தேசிய பள்ளி மற்றும் தேசிய மருத்துவ மனை என்று, மாகாணங்களுக்கு உறுதி அளிக்கப்பட்ட அதிகாரங்கள், மத்திய அரசால், பின்வாசல் வழியாக பிடுங்கிக்கொள்ளப்பட்டன. இப்போது. மீண்டும் சமஷ்டி பேசும் தமிழர் தரப்பு எதுவுமே, கடந்த 2013 ஆம் ஆண்டு வட மாகாணசபை தேர்தல் நேரத்தில், பதிமூன்றின் கீழான அதிகாரங்கள் குறித்து கூட பேசவில்லை, என்பதை அவர்கள் மறந்தாலும், மக்கள் மறந்துவிடகூடாது.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# சிதம்பர நடம் பயில் செழுங்கழல் இறைஞ்சுவாம்!



- தி.மயூரகிரி சிவாச்சார்யார் -
(இதழாசிரியர் - 'இந்துசாதனம்')

சிதம்பரம் மற்றும் இலங்கையின் கோயில் வழிபாட்டு மரபுகளில் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது.

தமிழகத்தில் கொடியேற்ற விழாவின் முறைமைகளில் பல வித்தியாசங்கள் உள. கொடிப்படம் வரைவதிலிருந்து கோயிற்பாரம்பரியங்களுக்கேற்ப அவை வேறுபடும். ஆனால், ஈழத்து கொடியேற்ற மரபு ஏறத்தாழ சிதம்பரத்தை ஒட்டியே காணப்படுகிறது.

அன்று மாலை சிதம்பரத்தில் நிகழும் திக்பந்தனம் என்ற நவ சந்தி ஆவாகன முறைமை அப்படியே எங்கள் மண்ணிலும் பின்பற்றப்படுகிறது.

ஆகம முறைமை கோயில்களாயினும் பல தமிழக கோயில்களில் தேரோட்டம் மாலையில் அல்லது பத்து நாள் உத்ஸவத்தில் எட்டாம் நாள் நிகழும். ஆனால் தீர்த்தவாரிக்கு முதல் நாள் காலை தேர் என்ற பொது வழக்கம் இலங்கையில் ஏற்பட சிதம்பரத் தாக்கமே காரணம்.

அது போலவே, தேருக்கு சிதம்பரத்தில் நடராஜா எழுந்தருளுவார். அந்த பாரம்பரியமே ராஜ மூர்த்தியை (சிவாலயமாயின் நடராஜர்/சோமாஸ்கந்தர், முருகனாலயம் ஆகில் ண்முகர், விநாயகர் ஆலயங்களில் பஞ்சவக்த்ர கணபதி தேருக்கு எழுந்தருளுவிக்கும் முறைமையாக எங்கள் மண்ணில் நிலவுகிறது.



இப்படி சிதம்பர மகாஸ்தல மரபுகளை நம்மவர்கள் அடிக்கடி சென்று தரிசித்து வந்ததால் ஆகம – ஸ்தல முறைகளுக்கும் அப்பால் தில்லை சிதம்பர தலத்தை அடியொற்றி வழிபாடுகளை முறைப்படுத்தியிருக்கிறார்கள்.

எல்லாவற்றிலும் சிறப்பு சப்பரம் பவனி வருதலாகும். தமிழகத்தில் குறித்த சில ஆலயங்களிலேயே சப்பர பவனி உண்டு. இலங்கையில் எல்லா ஆலயத்திலும் உண்டு. இந்த சப்பரத்தில் சிதம்பரத்திலுள்ள தெருவடைச்சான் சப்பரம் சிறப்பு.

தேரிலிருந்து சுவாமி அவரோகணமானதும் சிதம்பரத்தில் நூறு தீட்சிதர்கள் ஏக காலத்தில் லக்ஷ நாமார்ச்சனை செய்வர். அது கூட எங்கள் நாட்டில் விசே (பஞ்சமுக அர்ச்சனை / ண்முகார்ச்சனை) அர்ச்சனை மரபாகப் பேணப்படுகிறது.

சிதம்பரத்தில் போல (அங்கே நடராஜர் என்பதால் ஆனந்த தாண்டவம்) இங்கே எந்த மூர்த்தி தேருக்கு எழுந்தருளினாலும் திருநடனம் செய்து எழுந்தருளும் மரபு உள்ளது.

சிதம்பரத்தில் பைரவ மூர்த்திக்கும் தனிச்சிறப்பு




உண்டு. அங்கே விளங்கும் சுவர்ணாகர்ண பைரவர் மிகுந்த சிறப்புடையவர். அது போலவே ஈழத்திலும் பைரவ வழிபாடு வேறு எங்கும் இல்லாத தனிச்சிறப்பு பெறுகிறது.

சிதம்பரம் கோயிலில் இருக்கும் கோவிந்தராஜப் பெருமாளுக்கு வரலாற்றடிப்படையில் சிவ தீக்ஷிதர்களே பூஜை செய்து வந்தனர் எனக் குறிப்புகள் உண்டு. அது போலவே ஈழத்திலும் விஷ்ணுவாலயங்களில் சிவாச்சார்யர்களே வழிபாடுகளை ஆற்றுவதும் கவனத்திற்குரியது.

இவை உதாரணங்களே. இவ்வாறு பல மரபுகளில் சிதம்பர தல வழிபாட்டு முறைகள் அவ்வாறே இலங்கையில் நூற்றாண்டு நூற்றாண்டாக அனுசரித்துப் போற்றி வரக்காணலாம்.

இந்தப் பின்னணியில் எனது தனிப்பட்ட சிதம்பர தரிசன அனுபவத்தையும் இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சிதம்பர தரிசனம் என்பது ஈழத்துச் சைவர்களின் கனவுகளில் ஒன்றாகும்.

எனது சிதம்பர தரிசன வாய்ப்பு 2011 மாசித் திங்களில் அமைந்தது. மாசி அபிஷேகத்திற்கு அடுத்தநாள் அல்லது அதற்கடுத்த நாள் என்று நினைக்கிறேன்.



முதலிலேயே, சிதம்பரத்து தீக்ஷிதரான ஸ்ரீ சிவஸ்ரீ நடராஜதீக்ஷி தரை அறிந்திருந்தேன். எனினும், நான் சென்ற சமயம் அவர் சிதம்ப ரத்தில் இருக்கவில்லை. ஆனால், அவருடன் தொலைபேசியில் பேசி சில பல விடயங்களை தெரிந்து கொண்டேன்.

திருச்சியிலிருந்து பஸ்ஸில் பயணித்து சிதம்பரத்தை அடைகிற போது பிற்பகலாகியிருந்தது. அங்கே தங்குமிடம் ஒன்றில் சென்று அறையெடுத்து அங்கு நீராடி சாயங்கால பூஜைக்கு கோயிலுக்கு சென்றேன்.

சபையில் மிகவும் ஆத்மார்த்தமாக தீக்ஷிதர்கள் பூஜை செய்கிறார்கள். எங்கும் தூப தீப மணமும் அழ கும் நிறைகின்றன. அழகிய கூத்தரின் பஞ்சகிருத்திய திருநடனத்தை எவரது குறுகீடுமின்றி தரிசிக்க முடிந் தது. ஆனந்தமான அனுபவம் அது.

எனக்கு முன்னே, தமிழறியாத வடநாட்டு பெண் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு தீக்ஷிதர் ஒருவர் சிதம்பர ரஹஸ்யம் பற்றி ஆங்கிலத்தில் விளக்கியது இப்போதும் ஞாபகமிருக்கிறது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# "நன்று நன்று இன்னும் அன்னே நயந்து பிட்டு அளிக்க வேண்டும்"

இலங்கையின் தனித்துவமான பாரம்பரியங்களில் ஒன்று திருவெம்பாவைக்கால புராண படனம்.

மாணிக்கவாசக சுவாமிகளின் சரிதம் பேசும் கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணமே இவ்வாறு படனம் செய்யப்படுகிறது.

காலையில் திருவெம்பாவை பூஜையின் தொடர்ச்சியாக உத்ஸவ மூர்த்திகளுக்கு முன் இப்புராண படன நிகழ்ச்சி நடத்தும் வழக்கம் உள்ளது.

இந்த புராணத்தினை பத்து நாள்களும் பகுத்துப் படிப்பர். அப்படி படிக்கும் போது ஆறாம் அல்லது ஏழாம் நாளில் பிட்டுக்கு மண் சுமந்த கதை (மண் சுமந்த சருக்கம்) படிக்கப்படும்.

அந்த நாளில் விசேமாக சர்க்கரைப்பிட்டு அவித்து நெய்வேதித்து அடியார்களுக்கு பிரசாத விநியோகம் செய்வர்.

இப்போதெல்லாம் புராண படனம் பல இடங்களிலும் வழக்கொழிந்து போகிற போதிலும் இந்த ஆறாம் நாள் பிட்டு நெய்வேத்ய வழக்கம் மட்டும் சிறப்பாக பேணப்பட்டு வருகிறது.

ஆக, ஆவணி மூல பிட்டு திருவிழா மட்டுமன்றி திருவெம்பாவை காலத்திலும் எங்கள் நாட்டில் பிட்டுத் திருவிழா கொண்டாடப்படுகிறது.

பெருமானின் அளப்பெரும் கருணையை வெளிப்படுத்தும் இந்த திருநாளில் அவன் திரு மலரடிகளை போற்றுவோம்.

எங்கள் மண்ணின் அடையாளமான பிட்டு இறைவன் விரும்பி உண்ட உணவு. எத்தனை புது உணவு வகை வரினும் பிட்டின் இடம் தனியானதுதான்.

**ஆடையும் துணிந்த சீரையாக்கியே கூலியாளாய்**
**கூடையும் தலைமேல் கொண்டு கொட்டுடைத் தோள ராகிப்**
**பீடை கொண்டயர்வாள் காணப் பெரும்பசியுடையார் போல**
**வேடைகொண்டொல்லை வந்தார் வேண்டிய வடிவம் கொள்வார்**



**வள்ளல் தன் சீற்றம் கண்டு மாறு கோல் கையரஞ்சி**
**தள்ளரும் சினத்தராகித் தடக்கை தொட்டிழுத்து வந்து**
**உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும் ஒளித்து நின்ற**
**கள்வனை இவன் தான் என்று வந்திக்காளெனக் காட்டி நின்றார்**

- மயூரகிரி சிவாச்சார்யார் -

# சிதம்பர நடம் பயில் செழுங்கழல் .........

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரத்தை வலம் வந்த போது, இஸ்லாமிய பெண்கள் சிலர் தமது காலணியை கையில் கழற்றிக்கொண்டு கோயில்வீதியால் அப்பால் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் தமது வீட்டுக்கு செல்லவும் அது தான் பாதை என ஊகிக்கிறேன். ஆனால் அவர்கள் மிக சிரத்தையாக நடந்தனர் என்றே எனக்குத் தோன்றியது.

கோயிலின் பல பாகங்களிலும் தீக்ஷிதர்களை சம்ப்ரதாய – பஞ்சகச்ச உடையில் காண முடிந்தது. தீக்ஷிதர் மரபு பெண்கள் மடிசார் கட்டியவாறு இடையில் ஒரு குழந்தையோடு, கையில் ஒரு குழந்தையை பிடித்தவாறு தெருவில் இயல்பாக – வேகமாக நடந்தமையைக் காண முடிந்தது.

கோயிலின் உள்ளே, அவ்வேளையில் வேத கோஷமும் சிவநாம சங்கீர்த்தனமும், திருமுறை இசையும் கேட்டு கொண்டேயிருந்தன. பிரகாரத்தை சுற்றி வரும் போது கோவிந்த ராஜன், சிவகாமியம்பாள், பாண்டி நாயகர் சிற்றாலயங்களையும் தரிசித்தேன். பாண்டி நாயகர் கோயிலில் திருப்பணி நடந்து கொண்டிருந்ததாக ஞாபகம். திருமூலட்டானேஸ்வரரை காணும் வாய்ப்பு மட்டும் எனக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறு சிற்றாலயங்கள் பலவற்றை உள்ளடக்கிய பிரம்மாண்டமான கோயில். இக்கோயிலை சைவமக்களின் தலைமையகமாகக் கண்டார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் . அதன் காரணமாக, அவரும் அவர் தம் வழியில் சென்றவர்களும் தில்லைத் திருக்கோயிற் சூழலில் அறப்பணிகளில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

நாவலருக்கு முன்னரே அவர் தம் முன்னோராகிய யாழ். திருநெல்வேலி ஞானப்பிரகாசமாமுனிவர் தில்லையில் அரும் பணியாற்றியிருக்கிறார். மிகுந்த சமய அறிவும் பற்றும் உடையவராக அவர் திகழ்ந்திருக்கிறார். 16 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இவர் போர்த்துக்கேயரின் கத்தோலிக்க வன்கொடுமை மதமாற்றத்தை கடுமையாக எதிர்த்திருக்கிறார்.

ஆனாலும், அப்போதைய இராச்சியம் அவர்களுடையதாய் இருந்ததால். இரவோடு இரவாக இலங்கையை விட்டு இந்தியாவிற்கு ஓட வேண்டியவரானார். கோடிக்கரையை அடைந்த அவர் சிதம்பரத்தில் தங்கி. நிறைய சைவப்பணிகள் செய்திருக்கிறார். நிறையநூல்கள் எழுதியிருக்கிறார். இன்றைக்கு அவர் தம் நினைவாக சிதம்பரத்தில் அவரால் வெட்டப்பெற்ற ஞர்னப்பிரகாசர் குளம் ஒன்று இருக்கிறது.

இக்குளத்தை தேடி விபரமறிந்து ‘மாலை கட்டித்தெரு’ என்கிற இடத்தில் கோயிலுக்கு சிறிது தொலைவில் இக்குளத்தை கண்டோம். ஒரு காலத்தில் நடராஜப் பெருமானின் தெப்போத்ஸவம் நடந்த இக்குளம் இன்று வேதனையான சூழலை அடைந்திருக்கின்றமையையும் காண முடிந்தது. ( இப்போது மீண்டும் புனரமைக்கப்பட்டு தசதீர்த்த உத்ஸவத்தில் தீர்த்தம் கொடுக்கப் படுகிறது)

இக்குளத்திற்கு முன்பாக நாவலர் பெருமானால் அமைக்கப்பெற்ற சேக்கிழார்வ்பெருமான் திருக்கோயில் அமைந்திருக்கிறது. அன்று காலையில் நாம் சென்ற போது ஆலயம் நடை சாற்றியிருந்தது. ஆனாலும், ஆலயத்தை ஓரளவு பார்க்ககூடியதாயிருந்தது. சிறிய கோயில்.அழகாக இருக்கிறது.

ஆனால், அக்கோயிலை தரிசிக்க பெரியளவில் பக்தர்கள் வருவதாகப்காணமுடியவில்லை. எவ்வாறாயினும், பெரியபுராணம் தந்த சேக்கிழாருக்கு கட்டப் பெற்ற கோயில் நல்லமுறையில் உள்ளது. அதன் அருகே சேக்கிழாருக்குப்மணிமண்டபம் ஒன்றும் அமைந்துள்ளது.

இவ்விடத்திலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் பராமரிக்கப்பெறும் புண்ணிய நாச்சியார் மடத்தை அடைந்தோம். அதைப் பார்த்த போது பெரிய மகிழ்ச்சி. கணேசன் என்பார் நல்ல முறையில் பேணி வருகிறார். பூணூல் போட்டு கொண்டிருந்த அவர் தன்னை வேதாரணியபரம்பரை என்று சொன்னார்.

அந்த திருமடத்தில் நல்ல வகையான வசதிகள் இருந்தன. உண்மையிலேயே அம்மடம் இலங்கையிலிருந்து சிதம்பர தரிசனத்திற்குச் செல்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று அப்போது நினைத்து கொண்டேன். (இன்று சபைக்குள் நுழைந்த பிறகு பலரது பல கருத்துக்களை கேட்டதில் இக்கருத்தில் தெளிவின்மை ஏற்பட்டுள்ளது)

இன்னும் சில இலங்கையரின் மடங்கள் சிதம்பரத்தில் இருப்பதாக சொல்லப்பட்ட போதிலும் என்னால், அவற்றை அடையாளம் கண்டு செல்ல இயலவில்லை. எனவே, அவற்றின் இயக்கம் குறித்து என்னால் கண்டு கொள்ள இயலாமல் போயிற்று..

அங்கிருந்து சற்றே தொலைவில் உள்ளது ஆறுமுகநாவலர் மேல்நிலைப்பள்ளி. மிகவும் பழைய கட்டுமான முகப்பு. இப்போதும் நிறைய மாணவ – மாணவியர் அங்கே கல்வி கற்கிறார்கள். உண்மையிலேயே நாவலரால் சிறிய பாடசாலையாக ஆரம்பிக்கப்பெற்ற இது தற்போது விரிவு பெற்று உயர்ந்து மேல் நிலைப்பள்ளியாகியிருக்கிறது.

தில்லைத்திருக்கோவிலைச் சேர்ந்த தீக்ஷிதர்களுடன் விசாரித்த போது இந்தப்பாடசாலை வெகு சிறப்பாக இயங்குவதாக அறிய முடிந்தது..

அப்படியே அங்கிருந்து புறப்பட்டு தில்லைக் காளியை வணங்கி மீளவும் நடராஜர் கோயிலை வந்தடைந்தேன்.

சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோவிலுக்கு என்று பல காணிகள், தர்மசாதனங்கள் பல இலங்கையில் முக்கியமாக வட இலங்கையின் ஒவ்வொரு ஊர்களிலும் இருக்கின்றன. பல்லாண்டுகளுக்கு முன் சிவநேயச் செல்வர்களால் செய்யப்பட்ட அந்த தர்மசாதனங்கள் பதிவுகளில் உள்ளன அன்றி, கண்டறிவதற்கு கடினமாய், பிறரினால் கவரப்பட்டும், கவனிப்பாரற்றும் சிதைவதை அறிய முடிகின்றது..

இப்போது பல தீக்ஷிதர்களுடன் நட்பும் தொடர்பும் ஏற்பட்டுள்ளது. அவர்களது நிர்வாக திறனும், நடராஜ பக்தியும் நினைதொறும் வியப்பை தரும். பலவற்றை தியாகம் செய்து இந்த பணியை அவர்கள் திறமையாக முன்னெடுக்கிறார்கள்.

தீக்ஷிதர் கால மங்கையர்கள் கோலமிட்டு கோயிலை அழகு செய்து வைக்கிறார்கள். தீக்ஷிதர்கள் தாமே முன்னின்று கோயிலில் பல பணிகளையும் செய்கிறார்கள்.

பிறகு, யாழ்ப்பாணத்தில், உமாபதிதீக்ஷிதரை தரிசித்த போது அவரது நடேசபக்தி கண்டு வியந்தேன். ஓய்வு பெற்ற தமிழாசிரியரான அவர் நல்ல சாரீரமும் பக்தி ததும்ப திருமுறை பாடும் ஆளுமையும் கொண்டவர்.

எங்களுக்கு எத்தனை பிரச்சனை வந்தாலும் நடராஜரிடம் தான் சொல்லுவோம். எங்களை அவர் தான் காப்பாற்றும் தெய்வம். கேட்டதை கொடுக்கும் கருணை வள்ளல் அவர். என்று உணர்ச்சி மேலிட அவர் சொன்னார்

**இதந்தரு மடந்தையொடு இயைந்துயிர் உடம்பு போல்**
**விதம்படு உலகங்களில் விரிந்தொளி விளங்குவார்**
**கதம்பமொடு துந்துபி வயங்கெழ முழங்கவே**
**சிதம்பர நடம் பயில் செழுங்கழல் இறைஞ்சுவாம்.**



காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## வடிவுகளும் சாரமும் ராஜ கம்பீரங்களும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 220**

1956 ஆம் ஆண்டு காலத்தில் இருந்தே இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காண முடியாமல் இருக்கின்றது என நினைத்தால் அது அபத்தம்.

எவ்வளவோ தீர்வுப் பொதிகள் ஏற்படுத்தப்பட்டன. தீர்வு முறைகள் பேசப்பட்டன.

ஆனால் தமிழ் சிங்களப் பகுதிகளில் இருந்த தலைமைத்துவங்கள் அவற்றை தங்களது அரசியல் ஆதாயங்களுக்காக குழப்பியடித்து சேறாக்கியமையால்தான் எல்லாப் பகுதியினரும் இன்றைய நிலையில் இருக்கிறார்கள்.

இதுவரை காலமும் எட்டப்பட்ட இணக்கங்களில் இருந்து ஒன்றினை அடையாளப்படுத்தி, அன்றில் அதனோடு இணைந்திருந்த இன்னொன்றையும் சேர்த்து, நாட்டில் அதன் உள்ளே இருக்கும் இனங்களும் இந்த வடிவில்தான் முன்னேறப் போகிறது என்பதை அறிவித்தால், அதன்பின் அதனை நடைமுறைப்படுத்த – தேவையானவற்றை செயல்படுத்த–ஆரம்பங்களைமேம்படுத்தலாம்.

இது வரை கால்ச்மான நீண்ட அனுபவம் தமிழர் தரப்புக்கு எவ்வளவோ பாடங்களை தந்துள்ளமையால் அவற்றிலிருந்து தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

எட்டப்படும் இணக்கம் அமுல்படுத்தப்படுவதற்கானஉறுதிகள்சர்வதேசங்களில் இருந்து பெற்றுக்கொள்ள கூடியவைகளாக அமைய வேண்டும்.

நோர்விய சமாதான தூதுவர் கணித்தமை போல, எந்த இணக்கமானாலும், மேற்கத்திய நாடுகள் அவற்றில் ஈடுபட்டிருந்தாலும், இணக்கங்களை ஏற்படுத்துவதற்கு மேல் அவர்களால் போக முடியாது. அமலாக்கத்திற்கு இந்தியா துணை தர வேண்டும். பிராந்திய சக்தியாக இந்தியா அல்லது இந்தியத் துணையுடன் அமர்த்தப்படும் இன்னும் ஒரு பிராந்திய நாடு அதனைப் பொறுப்பெடுக்காத விட்டால் இணக்கங்கள் இணக்கங்களாகவே வரைவுகளிலே இருந்து தேர்தல்களைக் கடந்து விடும்.






நாட்டில் தமிழ் மக்களுக்காக யதார்த்தமான அரசியலை இருக்கும் சூழ்நிலைகளில் நடத்த விடாமல், இலட்சிய அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று, தாங்கள் இருந்த இடங்களில் இருந்து சுகமாக அரசியல் நடத்திக் கொள்வதில், சில புலம்பெயர் அமைப்பாளர்கள் சூரர்கள். தங்களது கனவான லட்சி–யத்தை வற்புறுத்த வைப்பதைத் தவிர நாட்டு நடப்புக்களும் அவற்றுக்குத் தேவையான யதார்த்தங்களும் அவர்களைப் பாதிப்பது குறைவு.

மிக அண்மையில் சில புலம்பெயர் அமைப்புகள் பிரசித்தமானவர்களாக அடையாளமிட்டு, கூட்டாகத் தமிழ் மக்களின் நாடாளுமன்ற தலைமமைகளுக்கு பேச்சுவார்த்தைகளில் அவர்கள் கணக்கெடுக்க வேண்டிய முக்கியமான அம்சங்கள் பற்றிய அறிக்கையைத் தந்துள்ளார்கள்.



அதேபோல பல விடயங்கள் முக நூல்களையும் ஆக்கிரமிக்கின்றன.

ஆண்டது முந்நூறு ஏக்கர் பரப்பானாலும், தமிழ்நாட்டில் முன்னைய குறுநில மன்னர்கள் தங்களுடைய பெயர்களுக்கு முன்பாக ராஜ, ராஜ கம்பீர, சர்வ லோக மார்த்தாண்ட என்றெல்லாம் பட்டங்கள் – தரவுகளை – வைத்துக் கொள்வது வழமை. ஆனால் அந்தக் குறுநில மன்னனின் ஆட்சியின் அதிகாரம் அவன் திரை கொடுக்கும் மன்னன் அனுமதித்த அளவிலேயே அடங்கும். அதே சமயம் அவனது மதிப்பும் பெருமையும் கூட அவன் ஆளுகின்ற மக்கள் தொகையையும் பொறுத்து உள்ளது.

அப்படிப்பட்ட மன்னர்கள் தனது குறுநிலத்தை தவிர முழுநாட்டுக்குமே தீர்மானங்கள் எடுக்க நினைத்தால் அவை சர்ச்சைகளுக்கு உள்ளாவது மட்டுமல்ல, வேண்டிய அளவு கவனங்களையும் ஈர்ப்பதில்லை.

தமிழ் மக்களிடையே புலம்பெயரில் எவ்வளவோ அமைப்புகள் உண்டு. அவை பலவகையானவை. காலத்துக்கு காலம் சில உருவானவை, உதிர்ந்து போனவை. அவற்றின் நோக்கங்கள், தன்மைகள், அதில் குறுநில மன்னர்கள் பற்றி எழுதப் போனால் அவை பாரதமாகி விடும்.

ஆனால் வேதனை தருவது என்னவோ ஒவ்வொரு அமைப்பும் தன்னிச்சையாக பரந்த தமிழ் மக்களை உள்ளடக்கி தீர்மானங்களை இயற்றி, ஏதோ அவை அங்கு வாழும் தமிழ் மக்கள் யாவராலும் அன்றில் பெரும் பகுதியாலும் ஏற்கப்பட்டதான தோற்றத்தை தருவதுதான்.

நான் அறிந்தவரையில் ஆஸ்திரேலியா தரப்பில் அப்படியான தீர்மானங்கள் அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் போது, அவை கணிசமான மக்களுடைய பார்வைக்கு தரப்படுவதில்லை. ஏதோ பத்து பேர் ஆக்கிவிட்டு,அவையெல்லாம் எல்லோர் சார்பிலும் வலம் வரும்.

இந்த விடயங்களை நாளை விவரமாகப் பார்ப்போம்.

(வளரும்....)



# இந்திய சுதேசியத் தயாரிப்பாக ஏவுகணை அழிப்பு யுத்தக் கப்பல்



இந்தியா தனது நவீனத்துவமான - மறைமுகமாக வழிகாட்டப்பட்டு ஏவுகணைகளை அழிக்கும் - மோர் முகாவோவை மும்பையில் உள்ள கடற்படை கப்பல் துறை தளத்தில் டிசம்பர் 18 ஆம் திகதி இயக்கத் தொடங் கியது.

இந்தியப் பெருங்கடலில் பணிகளைச் செய்வதற்கு உள்நாட்டு போர்க்கப்பல் அதன் அசைவியக்க வலிமை, அணுகல் வீச்சு மற்றும் நெகிழ்வுத்தன்மையை அதிகரிப் பதில் இது பெரும் பங்களிக்கும் என்று கடற்படை அதற்கு முன்னதாகக் கூறியது. அந்த அமைப்பின் செயல் அங்குரார்ப்பண விழாவில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ் நாத் சிங் கலந்து கொண்டார.

கடற்படையின் ப்ராஜெக்ட் - 15பியின் கீழ் மோர் முகாவோ இரண்டாவது போர்க்கப்பலாகும். இதன் கீழ் மேலும் இரண்டு போர்க்கப்பல்கள் 2025 ஆம் ஆண் டுக்குள் வழங்கப்படும் என்று கடற்படையின் நவீனமய மாக்கலை நன்கு அறிந்த அதிகாரிகள் தெரிவித்த னர்.

முதல் பி - 15பி போர்க்கப்பலான விசாகப்பட்டினம் கடந்த நவம்பர் மாதம் மும்பையில் இயக்கப்பட்டது. விசா கப்பட்டினம் - அழித்தல் ரக கலங்களை கடற்படை



யின் உள் அமைப்பான யுத்தக் கப்பல் வடிவமைப்புச் செயலணி வடிவமைத்துள்ளது.

163 மீ நீளம், 17 மீ அகலம், 7400 டன்கள் எடையுடன் இடப்பெயர்ச்சி கொண்ட, இந்தியாவில் கட்டப் பட்ட மிகவும் சக்திவாய்ந்த போர்க்கப்பல்களில் ஒன்றா கக் கருதப்படும் என்று கடற்படை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது நான்கு எரிவாயு விசையாழி களால் இயக்கப்படுகிறது, மேலும் மணிக்கு 30 கடல் மைலுக்கு மேல் வேகத்தை அடையும்திறன் கொண்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்த 100 ஆண்டுகளைக் கொண்டாடும் 2047 ஆம் ஆண்டுக்குள் கடற்படை முழுவதுமாக தன்னிறைவு அடையும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் மோர்முகவோவின் ஆணை யம் வந்துள்ளது. தொலைதூரக் கடல்களில் சீனா அதி க செல்வாக்கு செலுத்தத் தூண்டும் நேரத்தில் இது வருகிறது. மேலும் அதன் போர்க்கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பகுதிக்குள் அதிகளவில் நுழைந்து வருகின் றன. அங்கு போருக்குத் தயாராக உள்ள இந்திய போர்க் கப்பல்கள் எந்தவொரு அசாதாரண நடவடிக்கைக் காகவும் 24 மணி நேரமும் கண்காணிப்பை மேற் கொண்டு வருகின்றன.

மோர்முகாவோ, கன்னோரி ஆயுத அமைப்புகளுக்கு இலக்கு தரவை வழங்கும் நவீன கண்காணிப்பு ரேடார், மற்றும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட வலுவான நீர்மூழ்கி எதிர்ப்பு போர் (ASW) திறன்களைக் கொண்டுள் ளது. ராக்கெட் லாஞ்சர்கள், டார் பிடோ லாஞ்சர்கள் மற்றும் ஏஎஸ் டபிள்யூ ஹெலிக்கொப்டர்கள் என கடற்படை தெரிவித்துள்ளது. இது அணு, உயிரியல் மற்றும் இரசா யன (NBC) போர் நிலைமைகளின் கீழ் போராட வல்லது.

இந்த கப்பலில் 75 வீதம் உள் நாட்டு உள்ளடக்கம் உள்ளது. அத்தோடு 'ஆத்மநிர்பார் பாரத்'




அபியான் (தன்னம்பிக்கை இந்தியா பிரச்சாரம்) மீது நாட்டின் கவனத்தை பிரதிபலிக்கிறது.

உள்நாட்டு மயமாக்கல் மற்றும் தன்னம்பிக்கை யில் தெளிவான கவனம் செலுத்தி, கட்டுமானத்தில் உள்ள 44 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்க ளில் 42 இந்திய கப்பல் கட்டும் தளங்களில் கட்டப்பட்டு வருகின்றன, இதனால் 'ஆத்மநிர்பார் பாரத்' நோக்கிய நமது முயற்சிகளை மேலும் மேம்படுத்துகிறது. கூடுத லாக, 55 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு புலிஹி (தேவையை ஏற்றுக்கொள்வது) வழங்கப்பட் டுள்ளது, அவை அனைத்தும் இந்திய கப்பல் கட்டும் தளங்களில் கட்டப்படும், என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தியாவின் பாதுகாப்பு கொள்முதல் விதிகளின் கீழ், பாதுகாப்பு கையகப்படுத்துதல் கவுன்சிலின் புலிஹி இராணுவ வன்பொருள் வாங்குவதற்கான முதல் படியாகும்.

ராணுவ தளவாட சுவீகரிப்பை சுதேசியமயமாக்குவது அரசாங்கத்தின் முதன்மையான பணியாகும். உள் நாட்டு பாதுகாப்பு உற்பத்தித் துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 411 வெவ் வேறு ஆயுதங்கள் மற்றும் அமைப்புகளுக்கு இந்தியா படிப்படியாக இறக்குமதித் தடை விதித்தது. இந்த ஆயு தங்கள் மற்றும் கட்டமைப்பு முறைகள் அடுத்த ஐந்து முதல் ஆறு ஆண்டுகளில் கட்டங்களாக சுதேசிமய மாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்திய அரசாங்கம் ரூ.84,598 கோடியை - 2022 - 23 ஆம் ஆண்டிற்கான இராணுவத்தின் மூலதன கையகப்படுத்தல் பட்ஜெட்டில் 68 வீதன் - உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஆயுதங்கள் மற்றும் அமைப் புகளை வாங்குவதற்கு ஒதுக்கியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் உள்ளூர் பாதுகாப்பு கொள்முதல்க்கான ஒதுக்கீடு சீராக உயர்ந் துள்ளது. 2021 - 22ல் உள்நாட்டுத் துறைக் கான இராணுவத்தின் மூலதன கையகப் படுத்தல் பட்ஜெட்டில் 64 வீதம் அல்லது 70,221 கோடி ரூபா) மற்றும் 2020 - 21ல் மூலதன பட்ஜெட்டில் 58 வீதம் அல்லது (51,000 கோடி ரூபா) இந்திய மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

(மூலம்:'ஹிண்டுஸ்தான் ரைம்ஸ்')

# ரஷ்யா மீதான ஐரோப்பிய ஒன்றியத் தடை இந்தியாவை எவ்வழியிலும் பாதிக்காதாம்



பெப்ரவரி 5 முதல் ரஷ்ய சுத்திகரிக்கப்பட்ட எரி பொருள்களை வாங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளது.

ரஷ்யவின் எண்ணெயை வாங்குவதில் முன்னணி யில் உள்ள இந்தியா, அதன் எரிபொருள் ஏற்றுமதி இந் தத் தடையால். பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்க வில்லை என இந்திய எண்ணெய் செயலாளர் பங்கஜ் ஜெயின் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி பிற்பகுதியில் உக்ரைன் மீது மொஸ்கோ படையெடுத்ததைத் தொடர்ந்து, சில மேற் கத்திய நிறுவனங்கள் மமொஸ்கோவிலிருந்து வாங்கு வதைத் தவிர்த்துவிட்டதால், இந்திய சுத்திகரிப்பு நிறுவ னங்கள் ரஷ்ய எண்ணெயை தள்ளுபடியில் விற்கின் றன.

சில இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷ்ய எண் ணெயை பதப்படுத்தி, சுத்திகரிக்கப்பட்ட பொருள்களை ஐரோப்பா உட்பட மேற்கு நாடுகளுக்கு அனுப்புகின்றன.

பெப்ரவரி 5 ஆம் திகதி எடுக்கப்பட்ட நடவடிக்கை ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவிலிருந்து சுத்திகரிக்கப் பட்ட எரிபொருளை இறக்குமதி செய்வதைத் தடுக்கிறது என்றும் வேறு எந்த நாட்டிலிருந்தும் அல்ல என்றும் திரு ஜெயின் கூறினார்.

"அடுத்த தூண்டுதல் புள்ளி பெப்ரவரி 5. புவிசார் அரசியல் ரீதியாக வியத்தகு ஏதாவது நடந்தால் தவிர... நாங்கள் ஒரு நிலையான நிலையில் இருக்கிறோம், என்று திரு ஜெயின் கூறினார்.

இதுவரை இந்திய நிறுவனங்கள் ரஷ்ய எண்ணெய் வாங்குவதில் எந்த சிக்கலையும் சந்திக்கவில்லை என்றும் திரு ஜெயின் மேலும் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியம், ஜி7 நாடுகள் மற்றும் ஆஸ்தி ரேலியா ஆகியவை ரஷ்ய எண்ணெய் மீது பீப்பாய்க்கு 60 டொலர் விலையை அறிமுகப்படுத்தின. இது டிசம் பர் 5 முதல் நடைமுறைக்கு வருகிறது. இது கடல் வழி யாக ரஷ்ய மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதற் கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு மேல் வருகின் றது.

ரஷ்யாவின் கடல்வழி எண்ணெய் இறக்கும திக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளதால், மொஸ்கோ மாற்றுச் சந்தைகளை, முக்கியமாக ஆசி யாவில், ஒரு நாளைக்கு சுமார் 1 மில்லியன் பீப்பாய் களுக்குத் தேடத் தூண்டியது.

இந்திய நிறுவனங்கள் ரஷ்ய எண்ணெயை விலை உச்சவரம்பு மட்டத்திற்குக் கீழே வாங்குகின்றன என்று ஆதாரங்கள் இந்த வார தொடக்கத்தில் ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தன.

மேற்கத்திய நாடுகளின் சமீபத்திய நடவடிக்கைகள் வர்த்தக தீர்வு வழிமுறைகளை பாதிக்காததால் ரஷ்ய எண்ணெய்க்கு பணம் செலுத்துவதில் இந்திய நிறுவ னங்கள் எந்த சிக்கலையும் சந்திக்கவில்லை என்று திரு ஜெயின் கூறினார்.

(மூலம்:என்.டி.ரி.வி.)

காலைக்கதிர் Kalaikkathir

## ஸ்ரீதர் தியட்டர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மின்சாரக் கட்டணம் சுமார் 85 லட்சம் ரூபா செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்து வந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டிற்கு பின்பு தற்போது 2022 ஆம் ஆண்டுவரையில் மாத சிட்டைக்கான கொடுப்பனவு ஒழுங்காகச் செலுத்தப்பட்டு வந்தது. பழைய நிலுவை கருதி மின் இணைப்பு கடந்த நவம்பர் மாதம் 12 ஆம் திகதி துண்டிக்கப்பட்டது.

இவ்வாறு செலுத்தாத 85 லட்சத்து 50 ஆயிரத்து 982 ரூபா 75 சதத்திற்கும் 8 ஆண்டுகால வட்டிப் பணத்துடன் ஒரு கோடி ரூபாவினை தாண்டியதாக நிலுவை கணக்கிடப்பட்டிருந்தது.

இருந்தபோதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இயங்கிய காலத்தில் அமைச்சராக செயல்பட்ட பணிகளைக் கருதி மின்சாரக் கட்டணத்தை மட்டும் செலுத்தவும் வட்டிப் பணத்தை இரத்துச் செய்யவும் அமைச்சு மட்டத்தில் பேசப்பட்டு செலுத்த வேண்டிய தொகையில் முதல் கட்டமாக 25 லட்சம் ரூபா நேற்று செலுத்தப்பட்டதன் அடிப்படையில் மீண்டும் மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

## இராணுவத் தளபதிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லெப்டினன்ட் ஜெனரல் லியனகே இலங்கை இராணுவத்தின் 24 ஆவது தளபதியாக 2022 ஜூன் 01 முதல் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

## காவலூர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிகழ்வில் திருவுருவப்படத்திற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. விளக்கேற்றி வைத்தார். கட்சி ஆதரவாளர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். வி.நவரத்தினம் அவர்களின் நினைவாக பயன்தரும் மரக்கன்றும் நாட்டப்பட்டன.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கொழும்பு தமிழ் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான ந. காண்டீபன், பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## அச்சுவேலி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜன்னல் கண்ணாடிகளையும் மீன் தொட்டிகளையும் அடித்து உடைத்துச் சேதம் ஏற்படுத்தியுள்ளனர்.

## கடலில் காணாமல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்ற படகு கவிழ்ந்த நிலையில் கடலில் கண்டுபிடிக்கப்பட்டுக் கரைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில் அவர் நேற்றையதினம் மாதகல் கடலில் சடலமாக மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட சடலம் பிரதேச பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## பொலிஸாருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் இது தொடர்பாக நேற்று நடந்த நிகழ்வில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை அடுத்து முதன் முதலில் உதவி புரிந்த நாடு இந்தியா.

இலங்கைக்கான நீண்ட காலக் கடன. வசதிகள் உட்பட பல்வேறு வசதிகளை இந்தியா வழங்கியது. அதிலும் குறிப்பாக தமிழக அரசாங்கம் இலங்கை மக்களுக்காக மருந்துகள் மற்றும் உணவுப் பொருள்களை இரண்டு தடவைகள் கப்பலில் அனுப்பிவைத்தது.

## நத்தார் பண்டிகையை முன்னிட்டு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து பதுளை நோக்கி இன்று வெள்ளிக்கிழமை காலை 07.20 மணிக்கு மேலதிகமாக ஒரு ரயில் செல்லவுள்ளதுடன், சனிக்கிழமை இரவு 07.10 மணிக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை (26) இரவு 07.10 மணிக்கும் கொழும்பில் இருந்து பதுளை நோக்கி விசேட ரயில் சேவை முன்னெடுக்கப்படும்.

பதுளையில்இருந்துகொழும்புகோட்டை ரயில்நிலையத்தை நோக்கி சனிக்கிழமை காலை 07.30 மணிக்கு,அதே தினம் இரவு 07.30 மணிக்கு,எதிர்வரும் 27 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) இரவு 07.30மணிக்குரயில்சேவைஇடம்பெறும்.

வெள்ளிக்கிழமை காலை 09.20 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி மேலதிகமாக ஒரு ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 04 மணிக்கு இந்த ரயில் காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் புறப்படும்.







# சீன – இந்தியாவின் கடன் உத்தரவாதங்களுக்காக இலங்கை காத்திருக்கின்றது என்கின்றார் நந்தலால்!

இலங்கை சீனா இந்தியாவின் உத்தரவாதங்களிற்காக காத்திருப்பதாக இலங்கையின் மத்தியவங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் ஆதரவை பெறுவதற்காக இலங்கை சீனா இந்தியாவின் உத்தரவாதங்களுக்காகக் காத்திருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

தசாப்த காலங்களில் இல்லாத வகையில் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்காக இலங்கை செப்ரெம்பரில் சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் நிதி உதவிக்கான இணக்கப்பாட்டுக்கு வந்தது.

இலங்கை வெளிநாட்டு கடன்களை செலுத்துவதை நிறுத்தியதுடன் பல அவசர நடவடிக்கைகளை மேற்கொண்ட பல மாதங்களின் பின்னர் இது இடம்பெற்றது.

எனினும் சர்வதேச நாணயநிதியத்தின் உறுதியளிக்கப்பட்ட ஈ.எவ்.எவ். நிதி உதவியைப் பெறுவதற்கு இலங்கை தனக்குக் கடன் வழங்கிய நாடுகளிடமிருந்து உரிய உத்தரவாதங்களைப் பெறவேண்டும்.

கொழும்பு 2.9 மில்லியன் டொலரை எப்படியாவது பெறவேண்டிய நிலையில் உள்ளது – அது மிகப்பெரிய தொகை என்பதற்காக இல்லை – இலங்கை அந்த நிதி உதவியை வைத்துக்கொண்டு இரண்டு மாதங்களுக்கே இறக்குமதியில் ஈடுபட முடியும்.

ஆனால் சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவியைப் பயன்படுத்தி சர்வதேச அளவில் மேலும் கடனைப் பெறுவதற்கு இலங்கை தகுதி பெறக்கூடும்.

இலங்கைப் பொதுமக்களை பல மாதங்களாக வீதிக்கு தள்ளிய மிகமோசமான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

பாரிய ஆர்ப்பாட்டங்கள் ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து அகற்றின.

நாடாளுமன்றம் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப போவதாக உறுதியளித்துள்ளார்.

அதேவேளை இதற்காக கடும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக இலங்கை தனக்கு கடன் வழங்கிய சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுடன் அவர்களுக்கு வழங்க வேண்டிய மில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பேச்சுகளை மேற்கொண்டுள்ளது.

நாங்கள் இலங்கைக்குக் கடன் வழங்கிய அனைத்து தரப்பினருடனும் வெளிப்படையான திறந்த ஒப்பிடக்கூடிய விதத்தில் பரிமாறியுள்ளோம் என இலங்கையின் பிரதான வங்கியின் ஆளுநர் ஊடகத்துக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இனி அவர்கள் இது தொடர்பாக ஆராய்ந்து தங்கள் முடிவுகளை தீர்மானித்த பின்னர் எங்களுக்குப் பதிலளிக்க வேண்டும் – விரைவில் அவர்கள் பதிலளிப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச நாணயநிதியத்துடன் ஆரம்பக் கட்ட உடன்படிக்கையை செய்துகொண்ட தருணத்திலிருந்து இலங்கையிடம் கடன் வழங்குபவர்களின் சமத்துவம் மற்றும் வெளிப்படைத் தன்மை யின் அவசியத்தை இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது கொழும்பு எந்த கடன் வழங்குநர்களுக்கும் முன்னுரிமை அளிக்கக்கூடாது எனவும் இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

இலங்கை சர்வதேச நாணயநிதியத்தின் நிவாரணத்தை இந்த வருட இறுதிக்குள் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது சாத்தியமாகவில்லை – இருதரப்பு பேச்சுகள் நீடிப்பதே இதற்குக் காரணம்.



சீனாவுடனான பேச்சுகள் சிறிது தாமதமாகின எனத் தெரிவித்துள்ள இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநர், ஒக்ரோபரில் இடம்பெற்ற சீன கம்யுனிஸ்ட் கட்சியின் வருடாந்த காங்கிரஸ் கொவிட் கட்டுப்பாடுகள் காரணமாக பேச்சுகள் தாமதமாகின என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

எனினும் சர்வதேச நாணயநிதியத்தின் உடன் உதவி தாமதமாவதற்கு சீனாவுடனான பேச்சுகள் மாத்திரம் காரணமில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஜப்பானும் பாரிஸ் கிளப்பும் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக நன்கு அறிந்துள்ளன. பல வருடங்களாக அவை அந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன. இதன் காரணமாக அவை தமது ஈடுபாட்டில் மிகவும் மேம்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன, அவர்கள் இலங்கை நிலையை ஆய்விற்கு உட்படுத்தி பாரிஸ் கிளப்பில் இடம்பெறாத இந்தியா, சீனா போன்ற நாடுகளுடன் பகிர்ந்துகொண்டுள்ளன. இனி கடன் அந்த நாடுகளே இது தொடர்பாகத் தீர்மானிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளின் உத்தரவாதம் கிடைத்த பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதி கிடைப்பதற்கு நான்குமுதல் ஆறு வாரங்களாகும் எனவும் நந்தலால்வீரசிங்க தெரிவித்துள்ளார்

## சர்வதேச நாணயநிதிய நிதி உதவி கிடைப்பது ஜனவரி மாதத்துக்கு அப்பாலும் தாமதமாகலாம்!

### இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க



சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவி கிடைப்பது ஜனவரிக்கு அப்பாலும் தாமதமாகலாம் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடன்வழங்கியவர்களுடனான பேச்சுகளின் குழப்பமான நிலை காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின்; 2.9 பில்லியன் கிடைப்பது ஜனவரிக்கு அப்பாலும் தாமதமாகலாம் என இராஜாங்க அமைச்சர் எக்கனமி நெக்ஸ்டிற்கு தெரிவித்துள்ளார். 2022 முடிவடைவதற்கு முன்னர் சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவி கிடைக்கலாம் என இலங்கை அதிகாரிகள் முன்னர் தெரிவித்திருந்தனர் அதன் பின்னர் ஜனவரியில் கிடைக்கலாம் எனத் தெரிவித்திருந்தனர்.

இலங்கை சர்வதேச சந்தையில் டொலர் கொள்வனவில் ஈடுபடுவதற்கு அதற்கு சர்வதேச நாணயநிதியத்தின் உதவி கிடைக்கும் காலம் அவசியமானது.

அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்கு முன்னர் இந்த நிதியுதவியை பெறுவதற்காக எங்களால் முடிந்தளவு முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம் என இராஜாங்க அமைச்சர் செகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.


அரசாங்க தரப்பிலிருந்து எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் நிறைவேற்றிவிட்டோம். இலங்கைக்கு கடன் வழங்கியவர்களுடனான பேச்சுகள் இழுபடுவதால் இந்த தாமதம் இதுகுழப்பமான செயற்பாடுஎன இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் மூன்று சுற்று பேச்சுகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். அவர்கள் மேலும் சில தெளிவுபடுத்தல்களைக் கோரியுள்ளனர், நாங்கள் நிச்சயமாக கடன்வழங்குநர்களின் அங்கீகாரத்தைப் பெறுவோம். ஆனால் எப்போது என்பது தெரியாது என செகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடன்வழங்கிய தரப்புகள் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக எங்களுக்கு எதனையும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. எங்களுக்கு உதவத் தயார் என பாரிஸ்கிளப் தெரிவித்துள்ளது. ஆனால், உத்தியோகபூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையினர் நாட்டில் சிறப்பாக செயல்படுகின்றார்கள்!

### ஜனாதிபதி ரணில் புகழாரம்



நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையினர் சிறந்து விளங்கும் சூழலை உருவாக்குவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதில் முக்கிய பங்கேற்பாளர்களான தொழில் துறையினரை வலுவூட்டுவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற 2022 தேசிய சிறப்பு விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைப் பார்த்து வருந்துவதை விடுத்து, சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க வேண்டுமென அவர் சுட்டிக் காட்டினார்.

இதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் இரண்டாம் உலகப் போரால் அழிந்த ஜப்பானும் ஜேர்மனியும் வளர்ச்சியடைந்தமையை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## நாட்டின் சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவுக்குப் படையெடுப்பு!



நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையின் பின்னர் நெடுந்தீவில் உள்ள சுற்றுலா மையங்களுக்கு, நாட்டில் பல்வேறுபட்ட இடங்களில் இருந்தும் தென் பகுதியிலிருந்தும் அதிகளவு மக்கள் வருகை தந்து நெடுந்தீவில் உள்ள சுற்றுலா மையங்களைப் பார்வையிடுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலா மையங்கள் அதிகமாக உள்ள நெடுந்தீவு பகுதியில் 550 வருடம் பழைமை வாய்ந்த மரம், வெளிச்சவீடு, ஒல்லாந்தர் காலத்து கோட்டை, போர்த்துக்கேயர் காலத்து வைத்தியசாலை மற்றும் மேலும் பல தொல்பொருள் சான்றுகள், வரலாற்று சின்னங்கள் காணப்படுகின்ற நிலையில் நாட்டின் பல்வேறுபட்ட இடங்களில் இருந்தும் நெடுந்தீவிற்கு வருகை தருகிறார்கள்.

## மின்சார கட்டணம் ஜனவரியில் கட்டாயம் அதிகரிக்கப்படுமாம்!

### அமைச்சர் காஞ்சன விஜேசேகர திட்டவட்டம்

ஜனவரி மாதம் மின் கட்டணத்தை அதிகரிப்பது கட்டாயம் என மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனவரி 02 ஆம் திகதி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். மின்சார பிரச்சினையில் மக்களை தவறாக வழிநடத்தும் மின்சார சபையின் பொறியயலாளர்கள் சங்கத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என் றும் எச்சரித்துள்ளார். மேலும் அடுத்த வருடம் 10 மணித்தியால மின்வெட்டு ஏற்படும் என பொறியியலாளர்கள் சங்கத்தின் அறிவிப்பையும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர நிராகரித்துள்ளார்.



டிசெம்பர் 24, 25, 26 மற்றும் ஜனவரி 1, 2 ஆகிய திகதிகளில் மின்வெட்டு இருக்காது என மின்சார அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2022இல் வெளியிடப்பெற்றது.